இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 153 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 27 – வெள்ளிக்கிழமை 12 ஜனவரி 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 153 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 27 - Friday 12 January 2024 - Chennai 16 Pages ₹ 5.00

## கொளத்தூர் தொகுதியில் சமத்துவப் பொங்கல் விழா!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசுப் பொருட்கள் வழங்கினார்!



முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.1.2024) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெற்ற பொங்கல் விழாவில் சமத்துவ பொங்கல் கொண்டாடினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

## பொதுமக்கள் – கழக முன்னணியினர் பங்கேற்பு!

**சென்னை, ஜன.12–**

**தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களுடன் தனது தொகுதியான கொளத்தூர் தொகுதியில் மக்களுடன் இணைந்து பொங்கல் வைத்து கொண்டாடினார். மேலும் ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு பொங்கல் திருநாளை முன்னிட்டு நலத்திட்டப் பொருட்களை வழங்கி பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.**

**இது பற்றிய விவரம் வருமாறு:–**

தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் பொங்கல் திருநாளுக்கு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பரிசுத் தொகுப்பு வழங்குவது வழக்கம். அதன்படி, இந்தாண்டும் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு மற்றும் ரூ.1,000 ரொக்கப் பணம் ஆகியவை கொண்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் (10.01.2024) காலை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள நியாய விலை கடையில் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரூ.1000 வழங்கி இத்திட்டத்தினைத் துவக்கி வைத்தார். இத்திட்டத்தினால் தமிழ்நாடு முழுவதும் உள்ள 2 கோடிக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் பெரும் மகிழ்ச்சி அடைந்து முதல்வர் அவர்களுக்கு தொடர்ந்து நன்றி தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.01.2024) மாலை கொளத்தூர் தொகுதியில் மனைவி துர்கா ஸ்டாலினுடன் சமத்துவ பொங்கல் விழாவில் பங்கேற்றார்.

தனது கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பங்கேற்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோர் தொகுதி மக்களுடன் இணைந்து பொங்கல் வைத்து விழாவை கொண்டாடினர்.

இதில் கொளத்தூர் தொகுதி மக்கள், மாணவியர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த சமத்துவ பொங்கல் நிகழ்வில் அனைத்து மதத்தைச் சேர்ந்த பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோர் பொங்கல் வைத்து மகிழ்ந்து இவ்விழாவில் பங்கேற்ற அனைத்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பொங்கல் வழங்கி பொங்கல் வாழ்த்து தெரிவித்தனர்.

**பொங்கல் பரிசுப் பொருள்கள்!**

அத்துடன் இந்த பொங்கல் விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 1000–க்கும் மேற்பட்ட மாணவியர் மற்றும் மகளிருக்கு பொங்கல் பரிசுப் பொருள்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்த பரிசு பொருள்களில் வேட்டி, சேலை, பொங்கல் வைப்பதற்கான பொருள்கள் உள்ளிட்டவை இடம்பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொளத்தூர் சட்டமன்ற தொகுதி அலுவலகம் அருகே உள்ள அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அனிதா அச்சீவர்ஸ் அகாடமி மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பூக்கோலமிட்டு உற்சாகமாக வரவேற்றனர்.

முன்னதாக அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் புதுப்பானையில் பச்சரிசி இட்டு அங்கு பயிலும் மாணவிகளுக்கு முதல்வர் அவர்களும், அவரது மனைவி துர்கா ஸ்டாலின் அவர்களும் பொங்கல் பரிசு வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். பரிசுப் பொருட்களை பெற்றுக் கொண்ட மாணவிகள் முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

**2,100 பேருக்கு பொங்கல் பரிசுப் பொருட்கள்!**

அதேபோல் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு ஏற்பாட்டில் டான்போஸ்கோ பள்ளியில் 2 ஆயிரத்து 100 பேருக்கு நலத்திட்ட உதவிகள் நிகழ்ச்சி நடைபெற்றது. இப்பொங்கல் விழாவில், மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கிரிராஜன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் தி.மு.க. பகுதி நிர்வாகிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிசுப் பொருட்களை வழங்கினார்.

முன்னதாக, பொங்கல் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்கச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சாலையின் இருபுறமும் பொதுமக்கள் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது முதலமைச்சரிடம் பொதுமக்கள் மனு அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரு. கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், துணை மேயர் மு. மகேஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி நிர்வாகிகள் திருமதி ஹெலன் மற்றும் நரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பொங்கல் திருநாளை முன்னிட்டு 1 லட்சத்து 12 ஆயிரத்து 675

# போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கு சாதனை ஊக்கத்தொகை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, ஜன.12-*

*“பொங்கல்” திருநாளை முன்னிட்டு 1 லட்சத்து 12 ஆயிரத்து 675 பேருக்கு 6 கோடியே 75 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் சாதனை ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.*

*இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-*

*பொங்கல் திருநாளை முன்னிட்டு ஒரு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து அறுநூற்று எழுபத்தைந்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ரூபாய் ஆறு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து எழுபத்து மூன்றாயிரம் சாதனை ஊக்கத்தொகை வழங்கப்படும்.*

*தமிழ்நாட்டில் சிறப்பான மற்றும் திறமையான போக்குவரத்து சேவையை பொதுமக்களுக்கு அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இந்தியாவிலேயே தமிழகத்தில் இயங்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் தான் பயணிகள் அடர்வு, பேருந்து பயன்பாடு, எரிபொருள் செயல்திறன் ஆகியவற்றில் உயர்ந்து விளங்குகின்றன.*

*குக்கிராமம் முதல் மாநகரங்கள் உட்பட மக்கள் குடியிருக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் தங்குதடையின்றி, போக்குவரத்து சேவை அளிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு ஆகிய அனைத்து நிறுவனங்களிலும் தற்போது சுமார் ஒரு இலட்சம் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.*

*பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு ஆகியவற்றில் பணிபுரியும், பணியாளர்களில், 2023ஆம் ஆண்டில் 91 நாட்கள் மற்றும் அதற்கு மேலும், ஆனால் 151 நாட்களுக்கும் குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 85 ரூபாய் வீதமும்; 151 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் ஆனால் 200 நாட்களுக்கும் குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 195 ரூபாய் வீதமும், 200 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் பணிபுரிந்த ஊழியர்களுக்கு 625 ரூபாய் வீதமும் பொங்கல் “சாதனை ஊக்கத் தொகை” வழங்கப்படும்.*

*இந்த உத்தரவின்படி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஒரு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து அறுநூற்று எழுபத்தைந்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ரூபாய் ஆறு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து எழுப்பத்து மூன்றாயிரம் சாதனை ஊக்கத்தொகை வழங்கப்படும்.*

*இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.*

## சென்னையில் - மாபெரும் அயலகத் தமிழர் தின இரண்டு நாள் விழா!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் - இன்று விருதுகள் வழங்கி விழாப் பேருரை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்! 58 நாடுகளிலிருந்து தமிழ் வம்சாவளியினர் பங்கேற்பு!

**சென்னை, ஜன. 12 -**

**தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை மூன்றாம் ஆண்டாக ‘தமிழ் வெல்லும்’ என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு மாபெரும் அயலகத் தமிழர் தின விழாவை சென்னையில் இரு நாட்கள் (ஜனவரி - 11, 12) நடத்துகிறது.**

நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நேற்று நடைபெற்ற இந்த விழாவில் இலங்கை, மலேசியா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், துபாய், இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட 58 நாடுகளிலிருந்து தமிழ் வம்சாவளியினர், அமைச்சர் பெருமக்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அயல்நாடுகளில் வாழும் 1400க்கும் மேற்பட்டோர் இரண்டு நாள் நடைபெறும் இம்மாநாட்டில் பங்கேற்பதற்குப் பதிவுகள் செய்தனர். இதில், 218 சர்வதேச தமிழ் சங்கங்கள், 48 பிற மாநில தமிழ் சங்கங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அயலகத் தமிழர்கள் பங்கேற்றனர்.

**கண்காட்சி அரங்குகள் – புத்தக வெளியீடு!**

முதல் நாளான நேற்று (ஜனவரி 11), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார். அத்துடன் இங்கு அமைக்கப்பட்டுள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட அயலகத் தமிழர் கண்காட்சி அரங்குகளையும் திறந்து வைத்தார். மேலும், கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டுச் சிறப்பு நேர்வாக அயலகத் தமிழர்களின் புத்தக வெளியீடு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

**கலந்துரையாடல்கள் – கவியரங்கம்!**

இந்த விழாவில் சிறப்பு நிகழ்ச்சிகளாக நான்கு கலந்துரையாடல்களும் ஒரு கவியரங்கமும் நடைபெற்றன.

முதல் அமர்வாக நிதி, மனிதவள மேலாண்மை மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் தமிழின் தொன்மை – தொடர்ச்சி குறித்து துறைசார் வல்லுநர்கள் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்தனர். அதைத் தொடர்ந்து, கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில், சிந்து சமவெளி முதல்

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 12-01-2024

# பழனிசாமியின் ஓரங்க நாடகம்

தனது நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ள சிறுபான்மைச் சமூகத்துக்குத் தொடர்ந்து துரோகம் இழைத்து பா.ஜ.க.வின் பாதம் தாங்கியாகச் செயல்பட்ட பழனிசாமி, இப்போது சிறுபான்மையினரின் காவலராகக் காட்ட முயற்சித்து தனது துரோக நாடகத்தின் அடுத்த அத்தியாயத்தை நடத்திக் காட்டி வருகிறார்.

“அ.தி.மு.க. சிறுபான்மையினரை அரண் போல காத்து வருகிறது. அ.தி.மு.க. ஆட்சியில் சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகள் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்டன. இசுலாமியர்களுக்காக நிறைய திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம். நாட்டு மக்களுக்காக சூழ்நிலை கருதி பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தோம். இனி பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி வைக்காது. கூட்டணி வேறு, கொள்கை வேறு என்பதில் உறுதியாக இருக்கிறோம். கூட்டணியில் இருந்து வெளியே வந்த போதிலும் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள், அ.தி.மு.க.வையும் பா.ஜ.க.வையும் தொடர்புபடுத்திப் பேசி வருகிறார். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று திட்டவட்டமாக அறிவிக்கிறேன். சிறுபான்மை மக்கள் அ.தி.மு.க.வுக்கு ஆதரவு தர வேண்டும்” இதுதான் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநாட்டில் பழனிசாமி பேசியது ஆகும்.

இனி வருங்காலத்தில் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று சொல்லிக் கொள்ளும் பழனிசாமி, அந்த மாநாட்டில் பா.ஜ.க.வை விமர்சித்து ஏதாவது பேசினாரா என்றால் இல்லை. சிறுபான்மையினர் நடத்தும் மாநாட்டில் கலந்து கொண்ட பழனிசாமி, சிறுபான்மை இனத்துக்கு பா.ஜ.க. செய்த துரோகங்களைப் பட்டியல் போட்டாரா என்றால் இல்லை. மொத்தமும் தி.மு.க.வையும் முதலமைச்சரையும், கழக ஆட்சியையும்தான் விமர்சித்துப் பேசி விட்டு, ‘பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை’ என்பதை மட்டும் சொல்லி சிறுபான்மை இனத்தை ஏமாற்றப் பார்த்திருக்கிறார்.

**பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று சொல்வது பழனிசாமியின் தற்காலிக நாடகங்களில் ஒன்று. சிறுபான்மையின வாக்குகளை உடைப்பதற்காக பா.ஜ.க.வால் உருவாக்கப்பட்ட சதிச் செயலின் பிரதிநிதிதான் பழனிசாமி என்பதை அ.தி.மு.க.வினரே அறிவார்கள். உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்ற முடிவை எடுத்திருந்தால் அவர் பா.ஜ.க.வை விமர்சித்திருக்க வேண்டும். பா.ஜ.க.வின் தொங்கு சதையான பழனிசாமி அந்தக் காரியத்தை எப்படிச் செய்வார்?**

**சூழ்நிலை கருதி பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தாராம்? என்ன சூழ்நிலை? மக்களுக்காக கூட்டணி வைத்தாரா? தனது நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பா.ஜ.க.வின் பாதம் தாங்கினார். பா.ஜ.க. செய்த செயல்கள் அனைத்தையும் கைகட்டி வரவேற்றார். குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஆதரித்ததை விட அவர் சிறுபான்மையினருக்கு இழைத்த பெரிய துரோகம் வேண்டுமா?**

மாநிலங்களவையில் குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் : -

அ.தி.மு.க. எம்.பி.க்கள்:

1. SR பாலசுப்பிரமணியன்
2. N சந்திரசேகரன்
3. A முகமது ஜான்
4. AK முத்துக்கருப்பன்
5. A நவநீதகிருஷ்ணன்
6. R சசிகலா புஷ்பா
7. AK செல்வராஜ்
8. R. வைத்திலிங்கம்
9. A. விஜயகுமார்
10. விஜிலா சத்யநாத்

பா.ம.க. எம்.பி.:

11. அன்புமணி ராமதாஸ்

- இவர்களால்தான் சிறுபான்மையினருக்கு எதிரான குடியுரிமைச் சட்டம் மாநிலங்கள் அவையில் நிறைவேறியது. அதாவது ஆதரித்தவர்கள் 125 பேர். எதிர்த்து வாக்களித்தவர்கள் 105 பேர். அன்புமணி மற்றும் அந்த 10 அ.தி.மு.க. எம்.பி.க்களின் ஓட்டுதான் குடியுரிமைச் சட்டம் நிறைவேறக் காரணம்.

அந்த 11 பேரும் எதிர்த்து வாக்களித்திருந்தால்

ஆதரவு 125-11=114 ஆக குறைந்திருக்கும்.

எதிர்ப்பு 105+11=116 என்று உயர்ந்திருக்கும்.

எதிர்த்தவர்கள் 116 பேர் என்றும்

ஆதரித்தவர்கள் 114 பேர் என்றும் வந்திருக்கும். குடியுரிமைச் சட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும்.

116 க்கும் 114 என்ற கணக்கில் CAA சட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும். இந்தப் பித்தலாட்டத்தைச் செய்த பழனிசாமி தான் இன்று சிறுபான்மையர்க்கு ஆதரவாக நாடகம் ஆடுகிறார்.

குடியுரிமைச் சட்டமானது இசுலாமியர் உள்ளிட்ட சிறுபான்மையினரையும், ஈழத்தமிழர்களையும் மட்டுமல்ல; இங்குள்ள தமிழர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்போகும் சட்டம் என்பதால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தி.மு.க. சார்பில் கடுமையாக எதிர்க்கப்பட்டது. மாபெரும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. மக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. கோடிக்கணக்கான கையெழுத்துக்களுடன் குடியரசுத் தலைவரையே சந்தித்து வழங்கப்பட்டது. அப்போது பழனிசாமி என்ன சொன்னார்? ‘யாருமே பாதிக்கப் படவில்லையே’ என்று கேட்டார். சட்டமன்றத்தில் 2021 பிப்ரவரி 20 ஆம் தேதி, குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக பெரிய வகுப்பு எடுத்தார் பழனிசாமி.

ஆட்சி மாறியது. 2021 செப்டம்பர் 8 அன்று, ‘நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கேள்விக்குறியாக்கும் ஒன்றிய அரசின் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை திரும்பப் பெற வேண்டும்’ என்று சட்டமன்றத்தில் தனித் தீர்மானத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்தார்கள். இந்த தனித் தீர்மானத்தை சட்டமன்றத்துக்குள் இருந்து அ.தி.மு.க. ஆதரித்திருக்க வேண்டும். அல்லது தீர்மானத்தை எதிர்த்திருக்க வேண்டும். இரண்டையும் செய்யவில்லை. வேறு ஒரு காரணத்தைச் சொல்லி முன்னதாகவே வெளிநடப்பு நாடகத்தை நடத்தி வெளியேறி விட்டார்கள். இதுதான் இவர்கள் பா.ஜ.க.வை எதிர்க்கும் லட்சணம்.

‘ஓ.பன்னீர்செல்வம் இருந்து பா.ஜ.க.வை ஆதரிக்க கட்டாயப்படுத்தினார்’ என்பது உண்மையானால், இப்போது தான் பன்னீர்செல்வம் தனியாகப் போய்விட்டாரே. அதன்பிறகும் ஏன் குடியுரிமைச் சட்டத்தை எதிர்க்கத் தயங்கினார் பழனிசாமி? ஏனென்றால், இப்போது நடத்துவதும் பா.ஜ.க. போட்டுத் தந்த ‘ஓரங்க நாடகம்’ தான் என்பதால்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (11.1.2024) முகாம் அலுவலகத்தில், சிங்கப்பூர் நாட்டு உள்துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர் கே. சண்முகம் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சிங்கப்பூர் நாட்டு துணைத் தூதர் எட்கர் பெங்க் (Edgar Pang), உதவி இயக்குநர் ஷான் லிம் யங் சென், முதுநிலை மேலாளர் சுரேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஆப்கனில் 6.1 ரிக்டரில் நிலநடுக்கம்!

புதுடெல்லி: ஜன. 12-

ஆப்கானிஸ்தானில் நேற்று மதியம் 2:50 மணி அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கத்தின் அதிர்வு, டெல்லி வரை உணரப்பட்டதால் மக்கள் அதிர்ச்சியுற்றனர்.

நிலநடுக்கத்துக்கான தேசிய மையத்தின் தகவல் படி, ஆப்கானிஸ்தானில் நேற்று வியாழக்கிழமை மதியம் 2:50 மணி அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் டெல்லி, காசியாபாத், நொய்டா, பரிதாபாத், குருகிராம், காஷ்மீர் உள்ளிட்ட இடங்களில் உணரப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1 என பதிவாகியுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (11.1.2024) முகாம் அலுவலகத்தில், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் மற்றும் மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் ஆகியோர் சந்தித்து தலா 5 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார்கள். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.

### கல்வி - பண்பாடு - தொழில் என பல்வேறு தளங்களில்

# தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் பயனளிக்கும்!

### சிங்கப்பூர் அமைச்சர் கே.சண்முகம் சந்திப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

சென்னை,ஜன.12-

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் ‘தமிழ் வெல்லும்’ என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இரண்டு நாட்கள் நடைபெறும் “அயலகத் தமிழர் தினம் 2024” விழாவை நேற்று (11.1.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அயலகத் தமிழர் தின விழாவின் இரண்டாவது நாளான இன்று (12.1.2024) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி, ‘எனது கிராமம்’ என்ற முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றவுள்ளார்.

இவ்விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொள்ள வருகை தந்துள்ள சிங்கப்பூர் நாட்டின் சட்டம் மற்றும் உள்துறை அமைச்சர் கே. சண்முகம் அவர்கள் நேற்று (11.1.2024) முகாம் அலுவலகத்தில் முதலமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பு தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**சென்ற ஆண்டு சிங்கப்பூர் பயணத்தின்போது நான் விடுத்த அழைப்பை ஏற்று, அயலகத் தமிழர் தின விழாவில் பங்கேற்கத் தமிழ்நாட்டுக்கு வந்துள்ள சிங்கப்பூர் நாட்டின் சட்டம் மற்றும் உள்துறை அமைச்சர் கே. சண்முகம் அவர்களை எனது இல்லத்தில் வரவேற்று மகிழ்ந்தேன்.**

**உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024-இன் வெற்றியைத் தொடர்ந்து நடைபெற்றுள்ள எங்களின் இந்தச் சந்திப்பு கல்வி - பண்பாடு - தொழில் எனப் பல்வேறு தளங்களில் வளர்ந்து, நாட்டுக்கும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் பயனளிக்கும் என நம்புகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### ஊழல் - முறைகேடு புகார்களுக்குள்ளான பல்கலை துணைவேந்தர் ஜெகநாதனைச் சந்திக்க

# ஆர்.என்.ரவியின் சேலம் வருகையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

### மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பினர் கருப்புக் கொடியேந்தி கண்டன முழக்கம்!

சேலம், ஜன.12-

ஆளுநர் ஆர்.என்.ரவியின் சேலம் வருகையைக் கண்டித்து தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கருப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சேலம் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெகநாதன் மீது பல்வேறு முறைகேடு புகார்கள் எழுந்துள்ளன. இது தொடர்பாக கைது செய்யப்பட்ட இவர், தற்போது நிபந்தனை ஜாமீனில் உள்ளார். இந்நிலையில், பெரியார் பல்கலைக்கழக கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த ஆளுநர் ஆர்.என்.ரவியை துணைவேந்தர் ஜெகநாதன் வரவேற்றார். இதனால் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

துணைவேந்தர் மீது பல்வேறு ஊழல் மற்றும் முறைகேடு குற்றச்சாட்டு இருக்கும் நிலையில் அவரை ஆளுநர் சந்தித்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சாட்சியங்களைக் கலைக்கவும், முறைகேடு புகாரில் சிக்கியுள்ள துணைவேந்தரைக் காப்பாற்றவும் ஆளுநர் முயற்சிப்பதாக கூறப்படுகிறது. நிபந்தனை ஜாமீனில் உள்ள துணைவேந்தரை ஆளுநர் சந்திக்க வேண்டிய கட்டாயம் என்ன என்றும், அவரை துணைவேந்தர் பதவியில் இருந்து நீக்காதது ஏன் என்றும் பல்வேறு தரப்பினரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஆளுநர் ஆர்.என்.ரவியின் சேலம் வருகையைக் கண்டித்து தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கருப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அப்போது, கண்டன முழக்கங்களும் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. மாணவர் அணியினர், திராவிடர் கழக மாணவர் அமைப்பினர், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், இந்திய மாணவர் சங்கம், விடுதலைச் சிறுத்தைகளின் மாணவர் அமைப்பு, காங்கிரஸ் மாணவர் இயக்கம் உள்ளிட்ட அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பெரியார் பல்கலைக் கழக வரலாற்றில் இது போன்று ஆளுநர் வருகையின் பொழுது ஒட்டு மொத்த மாணவர் அமைப் பினரும் போராட்டத்தில் ஈடுபடுவது இதுவே முதல் முறையாகும்.

இதனிடையே, போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் மற்றும் தமிழர் திருநாள் பொங்கல் விழாவை முன்னிட்டு காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் ஒன்றியகழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றதில் ரூபாய் 20 லட்சம் மதிப்பீட்டில் கிளை கழக நிர்வாகிகள் 1500 பேருக்கு அன்பளிப்பு மற்றும் புத்தாடைகளை கழக பொருளாளர் நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் வழங்கினார். உடன் மாவட்ட கழக செயலாளர் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், திருப்பெரும்புதூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் வே.உமாகாந்த், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.1.2024) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெற்ற பொங்கல் விழாவில் 1000 மாணவிகள் மற்றும் மகளிருக்கு பொங்கல் பரிசுப் பொருட்களை வழங்கினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரு. கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஐ.சி.எஃப். வ.முரளிதரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி நிர்வாகிகள் திருமதி ஹெலன் மற்றும் நரேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.1.2024) கொளத்தூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில், 2100 பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுப் பொருட்களை வழங்கினார். இவ்விழாவில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரு. கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், துணை மேயர் மு.மகேஷ் குமார், பகுதிக் கழகச் செயலாளர்கள் நாகராஜன், ஐசிஎஃப் முரளி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அயலகத் தமிழர் தின இரண்டு நாள் விழா!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

செயற்கை நுண்ணறிவு வரை – ‘தொலை நோக்குச் சிந்தனையும் செயலும்’ என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.

பின்பு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி தலைமையில் அயலகத் தமிழர்களுக்காக தமிழ்நாடு அரசு முன்னெடுத்துச் செயல்படுத்தும் திட்டங்களான அயலகத் தமிழர்களுக்கு அளிக்கப்படும் அடையாள அட்டை, காப்பீடு வசதி, திருமண உதவித் திட்டம் போன்ற நலத் திட்டங்கள் குறித்த விவரங்களும், சிறப்புக் கலந்துரையாடலும் நடைபெற்றது.

அடுத்தடுத்த நிகழ்வுகளாக தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில் ‘ஒளிரும் எதிர்காலம் – வாய்ப்புகளும் சவால்களும்’ என்ற தலைப்பிலும், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் ‘வணிகத்தில் தமிழர்கள் – வாய்ப்பும் வளர்ச்சியும்’ என்ற தலைப்பிலும் கலந்துரையாடல்கள் நடைபெற்றது.

### ‘எனது கிராமம்’ எனும் முன்னோடித் திட்டம்!

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாம் நாளான இன்று (ஜனவரி 12ம் தேதி) விழாப்பேருரை நிகழ்த்துவதுடன் ‘எனது கிராமம்’ என்னும் முன்னோடித் திட்டத்தையும் தொடங்கி வைக்கிறார். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் தாங்கள் பிறந்த கிராமத்தை மேம்படுத்த விரும்பும் அயலகத் தமிழர்கள் அதற்குரிய நிதியை அளித்து இத்திட்டத்தின் வாயிலாகச் செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் சிங்கப்பூர் உள் துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா.சண்முகம் தலைமை விருந்தினராகப் பங்கேற்கிறார்கள் என்பது குறிப்பி டத்தக்கது.

விழாவின் முக்கிய நிகழ்வாக ‘வேர்களைத் தேடி’ திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியா, கனடா, ஃபிஜி, இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 57 அயலகத் தமிழ் மாணவர்கள் தாங்கள் பண்பாட்டுச் சுற்றுலா சென்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

### அயலகத் தமிழர்களுக்கு விருதுகள்!

முதலமைச்சர் அவர்கள் தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் நலன், வணிகம், தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் அயலகத் தமிழர்களுக்கு விருதுகள் வழங்குகிறார்கள்.

முதல் நாளின் தொடர்ச்சியாக இரண்டு கலந்துரையாடல்கள் நடைபெறும். ஐந்தாவதாக, நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா ‘தமிழ் மொழி வளர்ச்சியில் அயலகத் தமிழர்களின் பங்களிப்பு’ குறித்த அமர்வின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார்.

அயலகத்தில் தமிழ்க்கல்வி கற்றல், கற்பித்தல் குறித்த விவாத அமர்வு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெறுகிறது.

தமிழர்களின் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் விதமாக நாட்டுப்புற இயல், இசை, நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சி களுடன் குறிப்பாக தமிழ்நாடு திட்டக்குழு உறுப்பினர் நர்த்தகி நடராஜ் அவர்களின் நடன நிகழ்ச்சியும் அரங்கேற்றப்பட்டது.

தமிழர் மரபு மற்றும் பண்பாடுகளை விளக்கும் வகையில் தமிழர் நலன், தமிழர் கலை பண்பாடு, வணிகம், தமிழின் தொன்மை, தொடர்ச்சி, சர்வதேசத் தமிழ்ச் சங்கம் என்னும் கருப்பொருள்கள் வாரியாகக் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழர் கலை பண்பாடு மற்றும் வணிகத்தை விளக்கும் அரங்குகளும், தமிழின் தொன்மை மற்றும் தொடர்ச்சி குறித்து தமிழ்நாடு பாடநூல் கழகம், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ் தொல்லியல் துறை, தமிழ் இணையக் கழகம், இலங்கை தமிழ்க் கலை கண்காட்சி, அரங்குகளும், சர்வதேசத் தமிழ்ச் சங்கங்கள் கண்டங்கள் வாரியான அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

### காட்சி அரங்குகள்!

இவற்றுடன், முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான “நான் முதல்வன் திட்டம் மற்றும் சிப்காட், வழிகாட்டி (கைடன்ஸ்), டிட்கோ, சிட்கோ உள்ளிட்ட துறைகளின் காட்சி அரங்குகளும் இடம் பெற்றுள்ளன. சுற்றுலா வளர்ச்சித் துறை மற்றும் பூம்புகார், தமிழ் வளர்ச்சித் துறை, கோ ஆப்டெக்ஸ், அயலக நலத்துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகளை விளக்கும் காட்சி அரங்குகளும் இடம்பெற்றுள்ளன.

வெளிநாடு வாழ் தமிழர்கள் இங்கு முதலீடுகள் செய்வதற்கான வசதி வாய்ப்புகளை குறித்து விளக்குவதற்காக ஸ்டார்ட் அப், டினன் ஃபேம் உள்ளிட்ட கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சி அரங்குகளைக் காண்பதன் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அயலகத் தமிழர் நலன் கருதி ஆற்றிவரும் அரும்பணிகளையும் அயலகத் தமிழர் தாய்த் தமிழ் நாட்டின் மீது கொண்டுள்ள ஈடுபாடுகளையும் பொதுமக்கள் அறிந்து மகிழும் வாய்ப்புகள் ஏற்படும்.

இந்த விழாவிற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.மஸ்தான் முன்னிலை வகித்தார். அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாதிபதி வரவேற்புரை ஆற்றினார்.

---

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

**மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!**



கடலூர் கிழக்கு மாவட்டத்தில் தலைமைக் கழக அறிவிப்பின்படி நாளை (13.01.2024 - சனிக்கிழமை) வடலூர், மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

அதுசமயம், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், நகரமன்ற, பேரூராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மருத்துவ அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மைநல உரிமைப் பிரிவு, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி ஆகிய கழக சார்பு அணிகளின் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

ஒன்றிய உள்துறை அமைச்சருடன்

# தமிழ்நாடு அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் நாளை சந்திப்பு!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையில் செல்லும் இக்குழு தமிழ்நாட்டிற்கு வெள்ள நிவாரணம் வழங்க வலியுறுத்துகிறது!

*சென்னை,ஜன.12-*

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை தமிழ்நாடு அனைத்துக்கட்சி குழுவினர் நாளை (13.1.2024 சனிக்கிழமை) சந்திக்க உள்ளனர். தமிழ்நாடு அரசு கோரிய 37 ஆயிரத்து 907கோடி ரூபாய் வெள்ள நிவாரண தொகையை உடனடியாக வழங்குமாறு அவர்கள் வலியுறுத்த உள்ளனர்.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய வட மாவட்டங்களில் கடந்த டிசம்பர் மாதம் 3,4 ஆகிய தேதிகளில் மிக்ஜாம் புயல் காரணமாக அதி கனமழை வெளுத்து வாங்கியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா 6 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையை தமிழ்நாடு அரசு வழங்கியது. மற்ற மூன்று மாவட்டங்களில் பாதிப்புகளை சந்தித்த வட்டங்களில் மட்டும் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

இதேபோல், நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடந்த டிசம்பர் 17 மற்றும் 18ம் தேதி ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் சென்று பெரும் பாதிப்பு ஏற்பட்டது.வெள்ள சேதங்களை பார்வையிட நெல்லை சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அதிக பாதிப்புள்ள இடங்களுக்கு 6 ஆயிரம் ரூபாயும், குறைந்த பாதிப்புள்ள பகுதிகளுக்கு ஆயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்கப்படும் என அறிவித்தார். இதனைத் தொடர்ந்து கடந்த டிசம்பர் 19ம் தேதி டெல்லி சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், பிரதமர் மோடியை சந்தித்து, தமிழ்நாட்டின் கனமழை, வெள்ளத்தால் வட மாவட்டங்கள், தென் மாவட்டங்கள் அடுத்தடுத்து பாதிக்கப்பட்டிருப்பதை இயற்கை பேரிடராக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பை சீர் செய்ய கோரியபடி, தற்காலிக நிவாரணமாக 7ஆயிரத்து 33 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரண தொகையாக 12ஆயிரத்து 659 கோடி ரூபாயும் வழங்குமாறும் முதலமைச்சர் கோரிக்கை விடுத்தார். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு கோரிய வெள்ள நிவாரண தொகையை உடனடியாக வழங்க வலியுறுத்தி, அனைத்துக் கட்சி எம்.பிக்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து வலியுறுத்துவார்கள் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை தமிழ்நாடு அனைத்துக்கட்சிக்குழு வருகிற சனிக்கிழமை சந்திக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு தலைமையிலான இக்குழுவில், காங்கிரஸ் சார்பில் ஜெயகுமார், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சுப்பராயன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நடராஜன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ரவிகுமார், முஸ்லீம் லீக் கட்சியின் நவாஸ் கனி, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் சின்ராஜ் ஆகியோர் இடம்பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

பொங்கல் திருநாளை முன்னிட்டு

# சென்னையில் இருந்து இன்று முதல் சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

*சென்னை, ஜன. 12-*

பொங்கல் திருநாளை முன்னிட்டு சென்னையில் இருந்து இன்று முதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

பொங்கல் திருநாளை முன்னிட்டு, சென்னையில் இருந்து 6 இடங்களில் இன்று முதல் 3 நாட்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

மாதவரம், தாம்பரம் சானடோரியம் மெப்ஸ், பூவிருந்த வல்லி, கோயம்பேடு, கிளாம்பாக்கத்தில் இருந்து பேருந்துகள் இயக்கப்பட இருக்கின்றன.

13 ஆயிரத்து 184 சிறப்பு பேருந்துகள் உள்பட மொத்தம் 19 ஆயிரத்து 484 பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு 4 ஆயிரத்து 706 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

பொதுமக்களின் வசதிக்காக, கோயம்பேடு பேருந்து நிலையத்தி லிருந்து இதர பேருந்து நிலையங்களுக்கும் செல்ல ஏதுவாக மாநகர போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள் 24 மணி நேரமும் இயக்கப்பட உள்ளன என தமிழ்நாடு போக்குவரத் துத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

சென்னை கிழக்கு மாவட்டம்

## தகவல் தொழில்நுட்ப அணியின் பயிற்சி வகுப்பு கூட்டம்!

**மாவட்டச் செயலாளர்– அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!**



சென்னை கிழக்கு மாவட்டத்தில், தலைமைக் கழகம் அறிவித்துள்ள தகவல் தொழில்நுட்ப அணியின் முன்னெடுப்பு பயிற்சி வகுப்பு கூட்டம் நாளை 13.01.2024 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் TKA திருமண மாளிகை, MTH ரோடு, வில்லிவாக்கம், சென்னை-49ல், மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மை உரிமை பிரிவு அணி, சுற்றுசூழல் அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி, இலக்கிய அணி, அயலக அணி, மீனவர் அணி, மகளிர் தொண்டர் அணி, ஒட்டுநர் அணி, நெசவாளர் அணி, ஆதிதிராவிட நலத்துறை அணி, வர்த்தகர் அணி உள்ளிட்ட அணிகளின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

---



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி சார்பில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி ஏற்பாட்டில் 5000 கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்புகளை சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ அன்பரசன் வழங்கினார். உடன் கழக முன்னணியினர் உள்ளனர்.




நீலகிரி மாவட்டம், குன்னூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் ஏழை, எளிய மக்களுக்கு ஆன்லைன் வீட்டுமனை பட்டாவினையும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளையும் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. மற்றும் அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் வழங்கினர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்ஷினி, அரசு அதிகாரிகள், மற்றும் மாவட்ட,நகர, ஒன்றிய மற்றும் கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (11.01.2024) சென்னை, சைதாப்பேட்டை, தேரடி பகுதியில் 150 இளைஞர்கள் சுய தொழில் துவங்கிடும் வகையில் மானியத்துடன் கூடிய ஆட்டோ வழங்கினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக்குழுத்தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் மா.அன்பரசன், எம்.ஸ்ரீதரன் எம்.சி. மின்னல் கந்தப்பன், தா.மோகன்குமார் எம்.சி. பகுதி நிர்வாகிகள் காக்காடி எல்லப்பன் – வி.பி.ஞானகிராமன், ஆர்.ரமேஷ், மு.பாக்கியலட்சுமி, ஆரோக்கியம், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார், சைதை சாதிக், நா.மணிகண்டன், கோ.பால்கரன், வட்டச் செயலாளர்கள் எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா. சை.மு.சேகர், அட்கோ கமலநாதன், க.மணி மற்றும் டிவிஎஸ் மோட்டார் நிறுவன அலுவலர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (11.01.2024) சென்னை, திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாசர் சுவாமி திருக்கோயிலில் மயூர வாகன சேவன விழாவின் 100வது ஆண்டை முன்னிட்டு புதுபொலிவோடு மறுபதிப்பு செய்யப்பட்ட "பாம்பன் சுவாமிகளின் சாத்திரம் என்னும் நூலை வெளியிட்டார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், பேரூர் ஆதீனம் மருதாச்சல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞானபாலய தேசிகர் சுவாமிகள், இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, துணை ஆணையர் திருமதி சி.நித்யா மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# கடலோர வளங்களை மீட்டெடுப்பதற்காக "நெய்தல் மீட்சி இயக்கம்"!

## தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளது!

சென்னை, ஜன. 12 - தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், பசுமைத் தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு ஈரநில இயக்கம், ஆகியவற்றைத் தொடர்ந்து, அரசின் நான்காவது திட்டமான தமிழ்நாடு கடலோர வளங்களை மீட்பதற்காக "நெய்தல் மீட்சி இயக்கத்தினை" தொடங்குவதற்கான ஆணைகளை தமிழ்நாடு அரசு புதன் கிழமை வெளியிட்டது. இதற்கான அறிவிப்பை 2023-2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை உரையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களில், 1076 கிலோமீட்டர் தூரத்தை மையமாகக் கொண்டு, வரும் ஐந்து ஆண்டுகளில் உலக வங்கியின் நிதி உதவியுடன் நெய்தல் மீட்சி இயக்கம் செயல்படுத்தப்படும். கடற்கரையோர பல்லுயிர் பெருக்கம், கடற்கரையோரப் பாதுகாப்பு, கடற்கரையோர சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் கடலோரப் பகுதிகளில் மாசுக் கட்டுப்பாடு உள்ளிட்ட நான்கு முக்கிய கருப்பொருட்களை இத்திட்டம் கொண்டுள்ளது நீலப் பொருளாதாரத்தின் திறனைப் பயன்படுத்திக் கொள்ள முதன்முதலில் தமிழ்நாடு புளூ கார்பன் நிறுவனத்தை அமைப்பதை இந்தத் திட்டம் கருதுகிறது. தமிழ்நாடு "புளூ கார்பன் ஏஜென்சி" சதுப்புநிலங்கள், பவளப்பாறைகள் மற்றும் உவர் சதுப்பு நிலங்களை மீட்டெடுக்கும். மன்னார் வளைகுடாவில் உள்ள கரியாச் சல்லி தீவு, பவளப்பாறைகளை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் பின்வரும் முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

1. பல்லுயிர் பாதுகாப்பு பூங்கா, கடம்பூர், செங்கல்பட்டு மாவட்டம்.

2. கடல் ஆமை பாதுகாப்பு மையம், நாகப்பட்டினம் மற்றும் சென்னை.

3. சர்வதேச கடற்பசு பாதுகாப்பு மையம், மனோரா, தஞ்சாவூர் மாவட்டம்.

4. கடற்கரையோர ஈரநிலங்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு (பள்ளிக்கரணை உட்பட).

இம்முயற்சியின் கீழ் கடற்கரையோர பல்லுயிர் பாதுகாப்பிற்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. 11 கடற்கரைகளை நீலக்கொடி கடற்கரைகள் என சான்றளிக்க அரசு திட்டமிட்டுள்ளது. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை வசதிகளை அமைப்பதில் கடற்கரையோர சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களை ஈடுபடுத்தவும், கைவிடப்பட்ட மற்றும் பயனற்ற மீன்பிடி உபகரணங்களை அகற்றவும், பிளாஸ்டிக் கழிவுகள் அதிகம் உள்ள இடங்களைக் கண்டறிதல் உள்ளிட்ட மாசுக் குறைப்புக்கான சுழற்சிப் பொருளாதாரத் தீர்வுகளுக்கான முன்முயற்சிகளில் ஈடுபடவும்திட்டமிடப்பட்டுள்ளது.

ஆறுகளின் வழித்தடங்களில் அதிக மாசு உள்ள பகுதிகளில் பிளாஸ்டிக் கழிவுகளை முறையாகப் பிரித்து சேமித்து வைப்பதற்கான பொருள் சேகரிப்பு வசதிகள் மற்றும் அப்பொருட்களை மறுசுழற்சி செய்யும் வசதிகள் ஆகியவற்றை நிறுவுவதன் மூலம் கடல் மாசுபாடு தடுக்கப்படும். மேலும் சேகரிப்பு வசதிகளை இணைக்க மின்னணு கழிவுப் பரிமாற்ற தளத்தை உருவாக்குதல், மறுசுழற்சி மற்றும் பொருட்களை மீண்டும் பயன்படுத்துதல், பயனுள்ள பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை. மீள்குடியேற்றமான வீடுகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த உள் கட்டமைப்பு, காலநிலைக்கேற்ற கடலோர விவசாயம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகள் மூலம் காலநிலை மாதிரி கடலோர கிராமங்களை உருவாக்குதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகள் மூலம் சமூகத்தினை ஈடுபடுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ரூ.7 இலட்சம் கோடி முதலீடு – 27 இலட்சம் வேலைவாய்ப்புகள்

# முதலீட்டாளர்கள் மாநாடு மூலம் சாதனை படைத்து விட்டார் முதல்வர்!

## விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் பாராட்டு!

சென்னை, ஜன. 12- தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை வருமாறு:-

பல்வேறு நாடுகள் பங்கு பெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை மிக வெற்றிகரமாக நடத்தி, சுமார் 27 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய வகையில் 7 லட்சம் கோடி அளவிலான முதலீட்டை ஈர்த்து இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்திருக்கிறது தமிழ்நாடு அரசு. இந்த மகத்தான சாதனையை புரிந்த தமிழ்நாடு அரசின் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை நடுநிலையாளர்களும் நாளேடுகளும் பாராட்டி வருகின்றன. அந்த வகையில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியும் முதலமைச்சரை பாராட்டி வாழ்த்துகிறது.

தொழில் வளர்ச்சி என்பது ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் மிகப்பெரிய பங்காற்றக்கூடிய ஒன்றாகும். இந்தியா போன்ற விவசாய நாடுகளில் விவசாயம் பொய்த்து வரக்கூடிய நிலையில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டியது ஒரு அரசின் கடமையாகும். அது தொழில் துறையின் மூலமே சாத்தியமாக்கப்பட்டு வருகிறது. நாட்டின் வளர்ச்சிக்கும்



இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்கும் பெரும்பங்காற்றக்கூடிய தொழில்துறையை பேணி காத்து வளர்த்தெடுக்க வேண்டியது ஒரு நல்ல அரசின் கடமையாகும். அந்தப் பணியை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து திட்டமிட்டு செய்து வருகிறார்.

2006-2011 காலகட்டத்தில் அன்றைய தி.மு.க. ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்களுடைய கடும் முயற்சியால் 56 ஆயிரம் கோடிக்கும் அதிகமான அந்நிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டு பல்வேறு புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு மக்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டது. அதன் பின் தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த பத்தாண்டு கால அ.தி.மு.க. அரசு தன்னுடைய நிர்வாக திறமையின்மையால் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்காதது மட்டுமல்ல ஏற்கனவே செயல்பட்டு வந்த பல தொழிற்சாலைகள் அண்டை மாநிலங்களுக்கு இடம்பெயர்ந்தன. இதனால் தொழில் துறையில், பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு பின்னுக்கு தள்ளப்பட்டது.

இந்த நிலையில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின் தொழில்துறையில் தனி கவனம் எடுத்து செயல்பட்டு வந்தார். 'முதலீட்டாளர்களின் முகவரி தமிழ்நாடு' என்ற பெயரில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டது. அதன் மூலம் சுமார் 2 இலட்சம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டது. பல நாடுகளுக்கு தானே நேரில் சென்று அந்நிய முதலீடுகளை ஈர்க்க வழிவகை செய்தார். அதனுடைய உச்சமாக தற்போது சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை மிகப் பிரம்மாண்டமாக வெற்றிகரமாக நடத்தி, உலகம் திரும்பிப் பார்க்கும் வண்ணம், இந்தியா வியக்கும் வகையில் சுமார் 7 லட்சம் கோடி முதலீட்டை ஈர்த்து சாதனைப் படைத்துள்ளார். இதன் மூலம் வேலை வாய்ப்புகள் பெருகும், பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் அடையும். 2030இல் ஒரு ட்ரில்லியன் அமெரிக்கன் டாலர் அளவிற்கான பொருளாதார வளர்ச்சி என்ற முதலமைச்சர் இலக்கு இலகுவாக அடைய சாத்தியக் கூறுகளை இப்போது வசமாக்கியுள்ளார்.

இப்படி தி.மு.க. ஆட்சி காலத்தில் மட்டும் தொழில் துறையில் ஏற்றம் ஏற்படுவதற்கு காரணம் ஒரு நம்பிக்கையான அரசு என்கிற அடையாளத்தை உறுதிப்படுத்துவதோடு, கட்டமைப்புப் பணிகளில் தனி கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் தனிக்கவனம் போன்ற அடிப்படை வசதிகளில் ஆக்கப்பூர்வமாக செயல்படக்கூடிய அரசாக தி.மு.க. அரசு விளங்குகிறது. எனவே தான் தி.மு.க. ஆட்சி காலத்தில் இப்படிப்பட்ட தொழில்துறையில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு புதிய தொழிற்சாலைகள் பெருகி இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உறுதிப்படுத்தப்படுகிறது. எனவே இப்படி தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை அடுத்த நிலைக்கு வளர்த்தெடுக்க ஆக்கப்பூர்வமாக செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சரை விவசாயிகள்தொழிலாளர்கள் கட்சி பாராட்டுகிறது, வாழ்த்துகிறது.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தொகுதி முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது!

# பல்லவபுரத்தில் 5,000 கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்!

பல்லவபுரம், ஜன. 12- பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பல்லாவரம் வடக்கு பகுதி பல்லாவரம் தெற்கு பகுதி செம்பாக்கம் வடக்கு பகுதி பம்மல் வடக்கு பகுதி பம்மல் தெற்கு பகுதி புனித தோமையார் ஒன்றியம் பொழிச்சலூர் ஊராட்சி திருசூலம் ஊராட்சி சென்னை மாநகராட்சி 159 வது வார்டு மீனம்பாக்கம் ஆகிய பகுதிகள் உள்ள கழகத் தோழர்களுக்குபல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளருமான இ. கருணாநிதி ஏற்பாட்டில் 5000 மேற்பட்ட கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு ஏற்பாடு செய்து வழங்கப்பட உள்ளன நேற்று 11-01-2024 அன்று குரோம்பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் பல்லாவரம் வடக்கு பகுதி பல்லாவரம் தெற்கு பகுதி செம்பாக்கம் வடக்கு பகுதி பகுதிகளைச் சேர்ந்த 2000 மேற்பட்ட கழகத் தோழர்களுக்கு இ கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சரும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளருமான தா.மோ அன்பரசன் வழங்கினார்.

அதைத் தொடர்ந்து இன்று (12.1.2024) பம்மல் வடக்கு பகுதி மற்றும் பம்மல் தெற்கு பகுதி கழகத் தோழர்களுக்கும் பம்மல் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்திலும் அதைத்தொடர்ந்து புனித தோமையார் மலை ஒன்றியம் பொழிச்சலூர் ஊராட்சி கழகத் தோழர்களுக்கு பொழிச்சலூர் பகுதியில் திரிசூலம் ஊராட்சி கழக தோழர்களுக்கு திரிசூலம் பகுதிகளும் சென்னை மாநகராட்சி 159 வது வார்டு கழக நிர்வாகிகளுக்கு மீனம்பாக்கம் பகுதிகளும் வழங்கப்பட உள்ளன ஒவ்வொரு ஆண்டும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தனது சொந்த செலவில் தொகுதியில் உள்ள அனைத்து கழக நிர்வாகிகளுக்கும் வேஷ்டி, ஷர்ட்டு, புடவை, போன்ற பரிசுத்தொகுப்புகளை தொடர்ந்து கழக நிர்வாகிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

அப்பொழுது தாம்பரம் மாநகராட்சி மண்டல தலைவரும் பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயலாளருமான இ. ஜோசப் அண்ணாதுரை, பல்லாவரம் தெற்கு பகுதி கழக செயலாளர் இ. எஸ். பெர்னாட், செம்பாக்கம் வடக்கு பகுதி க,ழகச் செயலாளர் ஏ. கே.கருணாகரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

அதேபோல் இந்த ஆண்டும் அதுபோல் தயார் செய்யப்பட்டு நேற்று முதல் வழங்கப்பட்டு வருகின்றன இந்த நிகழ்ச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு பொங்கல் பரிசு தொகுப்புகளை கழகத் தோழர்களுக்கு வழங்கி வருகிறார்.

இதில் பகுதிச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் உள்பட கழக முன்னணியினரும் தோழர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# திரு.வி.க, நகர் தொகுதியில் பொங்கல் விழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பொங்கல்பரிசு வழங்குகிறார்!

சென்னை, ஜன.12- சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதி வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை கொண்டாடும் வகையில் இன்று வெள்ளிக்கிழமை (12.01.2024) காலை 7 மணி அளவில் புளியந்தோப்பு டாக்டர் அம்பேத்கர் சாலையில் அமைந்துள்ள திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பொங்கல் விழா மற்றும் கழக உறுப்பினர்களுக்கு வேட்டி, சட்டை, புடவை, காலண்டர், கரும்பு ஆகியவற்றுடன் கூடிய பொங்கல் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் உள்ளடங்கிய 71, 71 (அ) 72, 72 (அ), 73, 73(அ), 74, 74(அ), 75, 75(அ), 76, 76(அ) ஆகிய அனைத்து வட்டங்களிலும் உள்ள பகுதிக்கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் அனைத்து பாக முகவர்கள் ஆகியோருக்கு பொங்கல் பரிசினை கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி ஏற்பாட்டில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு வழங்குகிறார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகர மேயர் பிரியாராஜன், டாக்டர் கலாநிதிவீராசாமி எம்.பி., பகுதி கழக செயலாளர்கள் செ.தமிழ் வேந்தன், எம்.சாமி கண்ணு, மண்டலகுழு தலைவர் சரிதா மகேஷ்குமார், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத், டி. லோகேஷ், துலுக்கா ணம், லயன் பி.உதயசங்கர், துளசிங்கம், பெரோஸ்கான், பெரம்பூர் மகேஷ், ராஜ்முகமது, இரா.வீரமணி மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம். சரவணன், அம்பேத்வளவன், தமிழ்செல்விசசிகுமார், ரமணி லோகேஷ்,

வட்டகழக செயலாளர்கள் பரிமளாசுரேஷ்பாபு, ருத்திர மூர்த்தி, எம்.ஏ. டீக்கா, எம்.இசட்.அபாய், எம்.தமீம், பொல்லு டி.சுரேஷ்குமார், எஸ்.புஷ்பராஜ்,ஜி.கிருஷ்ணகுமார், வி.கே.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன் உள்ளிட்ட பகுதிக்ககழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், அனைத்து பாக முகவர்கள் பங்கேற்கின்றனர்.

ரமணி மாதவன் எம்.சி. தலைமை! நொளம்பூர் வே.ராஜன் எம்.சி.முன்னிலை! 147 வது வட்டம் -

# ஆலப்பாக்கம் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்கல்! வட்டச் செயலாளர் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, ஜன. 12 - மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ். ஜி.மாதவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டம், ஆலப்பாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டி வழங்கும் விழா இன்று (12.1.2024 - வெள்ளிக் கிழமை) மாலை 3 மணியளவில் நடைபெறுகிறது.

147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி நிலைக்குழு உறுப்பினர் ரமணி மாதவன் தலைமை வகிக்கிறார்.

மதுரவாயல் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர், 11 வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், டாக்டர் எம். ஜி.ஆர்.மருத்துவப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குகிறார்.

எனவே வட்டத்திற்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மேனாள் கவுன்சிலர், 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 90 மாணவ செல்வங்களுக்கு கல்வி உதவித் தொகையினை வழங்கினார். இந்நிகழ்வில் பகுதிக் கழகச் செயலாளர்கள் மு.ராசா, கே.கண்ணன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எஸ்.டி.தங்கராஜ், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், வட்டக் கழகச் செயலாளர்கள் பழக்கடை பாஸ்கர், எஸ்.மைக்கில், மு.கோவிந்தராஜ், வழக்கறிஞர் வீ.ஏ.ராஜா, பூக்கடை பழனிச்சாமி இரா.செழியன், பி.கே.குமார், மாவட்ட அமைப்பாளர் சசிகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் மற்றும் பெற்றோர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



தமிழர் திருநாள் மற்றும் தைப்பொங்கலை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நடுக்குத்தகை ஊராட்சியில் சமத்துவ பொங்கல் மற்றும் நலஉதவி வழங்கும் கலை நிகழ்ச்சி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ சமத்து பொங்கல் விழாவை துவக்கி வைத்து நலஉதவிகள் பரிசுகள் வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி குழு துணை பெருந்தலைவர் டி.தேசிங்கு, மாவட்ட நிர்வாகிகள் மா.ராஜி, எஸ்.ஜெயபாலன், ப.நரேஷ்குமார், விமல்வர்ஷன், மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், ஒன்றிய குழு துணை தலைவர் பரமேஸ்வரி கந்தன், கவுன்சிலர் யமுனா ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர் என்.லட்சுமி, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கே.சுரேஷ்குமார், பொறியாளர் எம்.மோகன், ஜி.எஸ்.சங்கீதா, ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி, அக்னி ராஜேஷ், நெமிலி சுரேஷ்குமார், ஜி.சுகுமார், ப.கந்தன், குணசேகரன், உதயா, பி.எல்.ஆர்.யோகா, கிளை செயலாளர்கள் ஹரிபாபு, ரமேஷ், இ.ஏ.சந்திரன், சிவாசேகர், மோகன், ராதாகிருஷ்ணன், தேவராஜ் உள்பட பலர் உள்ளனர்.

## தொழில் நுட்பத்தின் துணைகொண்டு - அனைவரையும் உள்ளடக்கிய

# வளமான வருங்காலம் படைக்க ஒன்றிணைவோம்!

## ‘டீல்ஸ்’ திட்ட தொடக்க விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை,ஜன.12 -

**“தொழில் நுட்பத்தின் துணை கொண்டு ஒளி மயமான, அனைவரையும் உள்ளடக்கிய வளமான வருங்காலத்தைப் படைக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம்” என்று டீல்ஸ் திட்ட தொடக்க விழாவில் உரையாற்றுகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.**

சென்னையில் 2024 ஜனவரி 11 அன்று பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற ‘டீல்ஸ்’ திட்ட தொடக்க விழாவில், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

“ ‘டீல்ஸ்’ திட்டத்தின் தொடக்க விழாவான இன்று, உங்கள் முன்னால் நான் மிகுந்த பெருமையுடனும் மகழ்ச்சியுடனும் நின்றுகொண்டிருக்கிறேன்.

வருங்காலத்துக்குத் தேவையான டிஜிட்டல் திறன்களை நமது உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் இந்தப் பயணத்தை மேற்கொண்டதற்காக பள்ளிக் கல்வித் துறைக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை மற்றும் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் ‘டெக்னாலஜி எஜுகேஷன் அண்ட் லேர்னிங் சப்போர்ட்’ (டீல்ஸ்) திட்டம் ஆகியவை இணைந்து நடத்தும் இந்தப் பணி, கல்வித் துறையில் டிஜிட்டல் புரட்சியையும், புதுமையான முறையில் கற்றுக்கொள்ளலையும் உறுதி செய்யும்.

தமிழ்நாடு அரசு மற்றும் மைக்ரோசாஃப்ட்டின் இந்த முயற்சி, நமது மாநிலத்தில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் திறன்களை உயர்த்துவதில் மிக முக்கியமான கட்டத்தை அடைந்திருக்கிறது.

**உயர்ந்த இடத்தில் மாநில கல்வித் துறை!**

இந்தச் சமயத்தில், நமது ‘திராவிட மாடல் அரசு’ நமது மாநிலத்தில் கல்வித் துறையை உயர்ந்த இடத்துக்கு அழைத்துச் சென்றிருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

நாட்டிலேயே முதன்முறையாக, நமது முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் கொள்கையை அறிமுகப்படுத்தினார். அதன் காரணமாக, நமது அரசுப் பள்ளிகளில் கணினிக் கல்வி கற்க வழி ஏற்பட்டது.

இன்று, நமது முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்புகளால், பள்ளிகளில் கணினி சார்ந்த கல்வித் திட்டம் கற்பிக்கப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக, நமது பள்ளிகளில் கரும்பலகைகளுக்குப் பதிலாக ஸ்மார்ட் வகுப்பறைகளைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அது மட்டுமல்லாது, நமது முதலமைச்சர் அவர்கள், பள்ளிக் கல்வியை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல பல்வேறு சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

மிக முக்கியமாக, அரசு தொடக்கப் பள்ளிகளில் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம், 17 ஆயிரம் பள்ளிகளில், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான 34 இலட்சம் மாணவர்கள் தினமும் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகிறார்கள்.



அதேபோல, ‘புதுமைப்பெண் திட்டம்’ மூலம், அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவிகள், உயர்கல்வி கற்க கல்லூரிகளுக்குச் செல்லும்போது அவர்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 2 இலட்சத்து 73 ஆயிரம் மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

இங்கு நிறைய அரசுப் பள்ளி மாணவ - மாணவியர்களும் வந்திருக்கிறீர்கள். நம்முடைய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களுக்கெல்லாம் நீங்களும் - உங்கள் வளர்ச்சியுமே சான்றாக உள்ளன.

**கற்றல் இடைவெளி பெருமளவில் குறைப்பு!**

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த இல்லம் தேடி கல்வி திட்டம், பேரிடர் நேரத்தில் மிகப்பெரிய அளவில் மாணவர்களுக்கு உதவியது. ‘எண்ணும் எழுத்தும்’ திட்டம் கற்றல் இடைவெளியை பெரிய அளவில் குறைத்துள்ளது.

அனைவருக்கும் ஐ.ஐ.டி (IIT) திட்டம், அரசுப் பள்ளி மாணவர்களை ஐஐடி போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேர வழிவகை செய்கிறது.

அரசுப் பள்ளிகளில் செயல்பட்டு வரும், பள்ளி மேலாண்மை குழுக்களை மறு கட்டமைப்பு செய்வதற்காக “ நம் பள்ளி நம் பெருமை” திட்டத்தை நம் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள லேடி வில்லிங்டன் பள்ளியில் முதலமைச்சர் அவர்கள் 2022ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள்.

நேற்று முன் தினம் கூட, முன்னாள் அரசுப் பள்ளி மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்கள் படித்த பள்ளிகளை மேம்படுத்திடும் விதமாக விழுதுகள் எனும் முன்னெடுப்பை தொடங்கி வைத்தோம்.

நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த ‘நான் முதல்வன்’ திட்டம், உயர் கல்விக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மிகச் சிறந்த வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது. அதோடு, திறன் சார்ந்த படிப்புகளையும் ‘நான் முதல்வன்’ திட்டம் வழங்கி வருகிறது. இதனால் வருங்காலத்தில் தொழில்துறையினர் எதிர்பார்க்கும் திறன்களை நமது மாணவர்கள் கொண்டிருக்க முடியும்.

ஆசிரியர்கள்தான் நமது வருங்காலத்தின் சிற்பிகள் என்பதை நம்புகிறோம். எனவே அவர்களுக்கு ‘ஆர்டிஃபீஷியல் இன்டெலிஜென்ஸ்’ (செயற்கை நுண்ணறிவு) போன்ற துறைகளில் பயிற்சி அளிக்கிறோம். அதன் மூலம், கரும்பலகைகளில் மட்டுமே பாடம் நடத்திக் கொண்டிருப்பதில் இருந்து விடுபட்டு, நவீனமான, புதிய முறைகளில் அவர்களால் மாணவகளுக்குப் பாடங்களைக் கற்பிக்க இயலும்.

**மாணவர்கள் திறனுக்கு ஏற்ப கற்பித்தல் முறை!**

வழக்கமான கற்பிக்கும் முறைகளில் இருந்து விலகி, தங்களின் எல்லைகளை விரிவாக்கிக் கொள்ள ஆசிரியர்களுக்கு ஆர்டிஃபீஷியல் இன்டெலிஜென்ஸ் உதவுகிறது. இதன் வாயிலாக, ஒவ்வொரு மாணவரின் திறனையும் பலத்தையும் அறிந்து, அவர்களுக்கு ஏற்றாற் போன்று கற்பித்தல் முறைகளை வடிவமைத்துக்கொள்ள ஆசிரியர்களால் முடியும்.

இது ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை வளப்படுத்துவதோடு, கற்பித்தல் எனும் பயணத்தை, தொடர் பரிசோதனை முயற்சிகளுக்கும் வளர்ச்சிக்கும் உட்படுத்துகிறது.

‘டீல்ஸ்’ போன்ற முன்னெடுப்புகள் மூலம், நாம் டிஜிட்டல் இடைவெளிகளைக் குறைத்து வருகிறோம். உலகம் டிஜிட்டல் மையமாகி வரும் சூழலில், இது போன்ற முயற்சிகள் பலமான அடித்தளத்தை நமது மாணவர்களுக்கு உருவாக்கித் தருகின்றன.

அரசும் தொழில்துறையும் இணைந்து செயல்படும்போது எப்படிப்பட்ட அதிசயங்கள் உருவாகும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்தத் திட்டம் திகழ்கிறது. நமது கல்வி, புத்தாக்க முயற்சிகள் மற்றும் இளைஞர்களின் வருங்காலம் ஆகியவற்றுக்காக அரசும், மைக்ரோசாஃப்ட் போன்ற நிறுவனங்களும் சரிசமமான அர்ப்பணிப்புணர்வுடன் செயலாற்றுகின்றன.

அரசும் தொழில் துறையும் இணைந்து, தடைகளைத் தகர்த்து, எண்ணற்றவர்களின் வாழ்க்கையை மாற்றுகிற வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றன.

இந்த முயற்சியில் முன்னணியில் நிற்கிற ஆசிரியர்களே, உங்களுடைய ஆர்வத்துக்கும் ஈடுபாட்டுக்கும் நான் தலைவணங்குகிறேன்.

அடுத்த தலைமுறை கண்டுபிடிப்பாளர்களுக்கும், பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்கிறவர்களுக்கும் வழிகாட்டுதல்கள் வழங்குவதில் உள்ள உங்களுடைய பங்களிப்பு, விலை மதிப்பற்றது.

**கற்பதற்கான ஈடுபாடு அதிகரிப்பு!**

கற்பித்தலில் உள்ள புதிய நுட்பங்களையும் முறைகளையும் ஏற்றுக்கொள்கிற உங்களின் ஆர்வத்தினால் உங்களது கற்பித்தல் முறை வளமாவதோடு, உங்களது மாணவர்கள் மத்தியில் கற்றுக்கொள்வதற்கான ஈடுபாட்டையும் அதிகரிக்கிறது.

மாணவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, நீங்கள் எல்லோரும் ஒரு புதிய பயணத்தை மேற்கொள்வதற்கான புள்ளியில் நின்றுகொண்டி ருக்கிறீர்கள்.

இந்தத் திட்டம் தொடங்கப்படும் இந்த நாளில், உண்மையான வளர்ச்சி என்பது அறிவைத் தேடிச் சேகரிப்பதிலும், அதனை மனிதநேயத்துடன் செயல்படுத்துவதிலும்தான் இருக்கிறது என்பதை நினைவில் கொள்வோம்.

கல்வித்துறையில் இளைய மனங்களை ஒரு மாபெரும் புரட்சிக்குத் தயார்படுத்தி வருகிறது தமிழ்நாடு. கல்வித்துறையில் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம், நாம் ஆசிரியர்களை விட்டு விலகுகிறோம் என்று அர்த்தம் அல்ல. மாறாக, அவர்களை ஆசிரியர்கள் என்ற இடத்திலிருந்து வழிகாட்டிகள் எனும் நிலைக்கு உயர்த்துகிறோம்.

கற்பனைத் திறனை வளர்த்துக் கொள்வதற்கும், பிரச்சினைகளுக்கு நவீனமான வழிகளில் தீர்வு காண்பதற்கும் தொழில்நுட்பம் மிகுந்த உதவியாக உள்ளது. காலத்துக்கேற்றாற் போல் மாணவர்கள் தங்களைத் தகவமைத்துக் கொள்வதற்கும், புத்தாக்க முயற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும் தேவையான திறன்களை தொழில்நுட்பம் வழங்குகிறது.

அடுத்த தலைமுறை தலைவர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் மாற்றத்தின் தூதுவர்கள் ஆகியோரை உருவாக்குவதற்கு செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை உங்களது நண்பராக நீங்கள் கருத வேண்டும் என்று ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்குள் என்ன திறன்கள் ஒளிந்திருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள, இந்தத் தொழில்நுட்பத்தை ஒரு கருவியாக நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாணவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திறமைகளை வெளிக்கொணர்வீர்!**

கட்டற்ற கல்வி, ஒளிபடைத்த மனங்கள், காணுமிடமெல்லாம் புதுமை என்ற இலக்குகளை நோக்கி நாம் அனைவரும் பயணிப்போம்.

நாம் கற்கும் ஒவ்வொரு பாடத்தையும், நாம் பெறும் ஒவ்வொரு அனுபவத்தையும் ஆர்வத்துடன், உற்சாகத்துடன் எதிர்கொள்ள இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்வோம்.

அரசும் தொழில்துறையும் கைகோர்க்கும் இந்தக் கூட்டணியை உருவாக்கிய அனைவருக்கும் என்னுடைய நன்றியை இந்தத் தருணத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில்நுட்பத்தின் துணை கொண்டு, ஒளிமயமான, அனைவரையும் உள்ளடக்கிய வளமான வருங்காலத்தைப் படைக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

பள்ளிக் கல்வித் துறையில் ஒவ்வொரு நாளும் புதிய புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி, மாணவர்களின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சருக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வி முக்கியம் என்று தந்தையின் இடத்திலிருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்போதும் சொல்லி வருகிறார்கள். அதன்படி நீங்கள் அனைவரும் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்.

கல்வித்துறையில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் அதே நேரத்தில், ஒரு விளையாட்டுத் துறை அமைச்சர் என்ற முறையில், மாணவர்களை பி.டி.பீரியடுகளின் போது விளையாட அனுமதிக்க வேண்டும் என்று ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பி.டி.பீரியடுகளைக் கடன் வாங்கி பாடங்களை நடத்தாதீர்கள் என்பதை நான் இங்கே ஒரு கோரிக்கையாகவே வைக்கிறேன்.

‘டீல்ஸ்’ முன்னெடுப்பு வெற்றி பெறவும் - மாணவர்களின் மேன்மைக்கு துணை நிற்கவும் என்னுடைய வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜே.குமரகுருபரன். ‘நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி’ உறுப்பினர் செயலர் ஆர்.சுதன் நிர்மான் டீம், இணை முதன்மைச் செயல் அலுவலர் உமா கேசனி, ஜீக் மைண்ட்ஸ் முதன்மைச் செயல் அலுவலர் கணேஷ் கோபாலகிருஷ்ணன், டேட்டா அண்ட் ஆர்டிஃபீஷியல் இன்டெலிஜென்ஸ், மைக்ரோசாஃப்ட், இயக்குநர் சிசில் சுந்தரம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

---

### அயலகத் தமிழர் தின விழாவுக்கு வருகை தரும்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்.

*சென்னை, ஜன. 12 -*

*நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று காலை நடைபெறும் அயலகத் தமிழர் தின விழாவுக்கு வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கண்டோன் மெண்ட் பட்ரோடு அண்ணா சிலை அருகில் இன்று காலை 9.00 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்றும் இவ்விழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் அணி திரண்டு பங்கேற்க வேண்டும் என்றும் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*



*இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:*

*அயலகத் தமிழர் தின விழா இன்று 12ம் தேதி காலை 9.30 மணியளவில் நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் உள்ள மாநாட்டு கூட்டரங்கில் நடைபெற உள்ளது.*

*இவ்விழாவில் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.*

*இவ்விழாவிற்கு வருகைத் தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டோன் மெண்ட் அண்ணா சிலை அருகில் இன்று காலை 9.00 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.*

*இவ்விழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் ஆயிரக் கணக்கில் அணி திரண்டு மேளதாளம் பேண்டு வாத்தியம் முழங்க எழுச்சியான முறையில் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.*

---

# விடுமுறை நாட்களுக்குப் பிறகு பத்திரப்பதிவுகளுக்கு கூடுதல் டோக்கன்!

## பத்திரப்பதிவுத்துறை அறிவிப்பு!

*சென்னை, ஜன.12-*

*தைப்பொங்கலை (15.1.2024) அடுத்து வரும் நாட்களில் அதிக அளவில் ஆவணங்கள் பதிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுவதால் பொங்கலை ஒட்டிய விடுமுறை நாட்கள் முடிந்து அடுத்த வேலை நாளான 18.01.2024 முதல் 31.1.2024 வரையிலான காலத்தில் வரும் அனைத்து வேலை நாட்களிலும் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதலாக பதிவு டோக்கன்கள் வழங்குமாறு வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலர் ஜோதி நிர்மலாசாமி உத்தரவிட்டுள்ளார்.*

*ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 டோக்கன்களும், இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200-க்கு பதிலாக 300 டோக்கன்களும் வழங்கப்படும். மேலும் தற்போது வழங்கப்படும் 12 தட்கல் டோக்கன்களின் எண்ணிக்கை 20-ஆக உயர்த்தப்படும்.*

---

### மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில்! திருவொற்றியூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

# கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு! ஆர்.எஸ்.பாரதி வழங்குகிறார்!

## கலாநிதி வீராசாமி எம்.பி. - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பங்கேற்பு! தி.மு.தனியரசு ஏற்பாட்டில்!

*சென்னை, ஜன. 12-*

*திருவொற்றி யூர் கிழக்கு பகுதி தி.மு.க சார்பில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் - 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு கழக நிர்வாகிகளுக்கும், பாகமுகவர்களுக்கும் (BLA 2) பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் விழா இன்று (12.1.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணியளவில் டி.கே.பி.திருமண மாளிகையில் நடைபெறுகிறது.*

*இவ்விழாவில் கழக அமைப்பு செயலாளர் - மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கி சிறப்புரையாற்று கிறார்.*

*இதில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.*

*ஆகையால் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்ளும் தி.மு. தனியரசு கேட்டுக்கொண்டுள்ளார்.*

---

### சென்னை வடக்கு மாவட்டத்தில்

# சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

## மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்டத்தில் தலைமை கழகம் அறிவித்துள்ள தகவல் தொழில்நுட்ப அணி முன்னெடுப்பில் நாளை (13.01.2024, சனிக்கிழமை ) காலை 9.00 மணியளவில் இராயபுரம் அறிவகம் திருமண மண்டபத்தில் மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது

இதில் நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொது குழு உறுப்பினர்கள், கழக இளைஞரணி, மாணவரணி, தொண்டரணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மீனவர் அணி, மருத்துவ அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மை உரிமை பிரிவு, ஆதி திராவிடர் நல குழு, வர்த்தகர் அணி, நெசவாளர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா தொழிலாளர் அணி, உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**தா.இளையஅருணா**

செயலாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.



பள்ளிக் கல்வித்துறையில் உள்ளது போல் தொடக்கக் கல்வித் துறையிலும் ஆசிரியர்களுக்கு மாநில அளவிலான மூதுரிமை கடைபிடிக்கப்படும் என்று வெளியிடப்பட்டுள்ள அரசாணை 243 க்கு தலைமைச் செயலகத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழியை தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவர் கு.தியாகராஜன் தலைமையில் நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.





மேயர் ஆர்.பிரியா பள்ளிக் கல்வித்துறை மற்றும் சென்னை மாநகராட்சியின் சார்பில் மாமன்ற உறுப்பினர்களுக்கான பள்ளி மேலாண்மைக் குழு குறித்த பயிலரங்கத்தினை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்து, பள்ளி மேலாண்மை குழு பயிற்சி கையேட்டினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், துணை ஆணையாளர் (கல்வி) ஷரண்யா அறி, வட்டார துணை ஆணையாளர்கள் கட்டா ரவி தேஜா, (வடக்கு), ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), நிலைக்குழுத் தலைவர்கள் த.விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரி விதிப்பு (ம) நிதி), மண்டலக்குழுத் தலைவர்கள் நேதாஜி யு.கணேசன், பி.ஸ்ரீராமுலு, பி.கே.மூர்த்தி, கூ.பி.ஜெயின், நொளம்பூர் வே. ராஜன், ஆர்.துரைராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதிக்கான கலைஞர் நூலகத்தை, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார். உடன் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, சி.என்.அண்ணாதுரை எம்.பி, பெ.சு.தி.சரவணன் எம்.எல்.ஏ, ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா விஜயரங்கன், மெய்யூர் சந்திரன், த.ரமணன், பா.ராமஜெயம் சு.ராஜாங்கம் உட்பட பலர் உள்ளனர்.



கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி 53 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.பா.வேளாங்கன்னி ஏற்பாட்டில் மண்டலம் 05 பகுதி உள்ள வட்ட நிர்வாகிகள் மற்றும் முன்களப்பணியாளர் 500 நபர்களுக்கு புத்தாடைகளை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார், சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா, ஐட்ரிம் மூர்த்தி எம்.எல்.ஏ. மாநில மகளிர் அணி து. செயலாளர் திருமதி குமரி விஜயகுமார் மற்றும் மண்டல குழுத் தலைவர் ஸ்ரீராமுலு மற்றும் மேற்கு பகுதி செயலாளர் வா.பெ சுரேஷ், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், பால லட்சுமனணன், வ.செ.கௌரிஸ்வரன் வ.செமற்றும் வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### துணைவேந்தர் ஜெகநாதன் மீதான முறைகேடு !

# பெரியார் பல்கலையில் காவல்துறை மீண்டும் சோதனை !

சேலம், ஜன. 12-

துணைவேந்தர் ஜெகநாதன் மீதான முறைகேடு விவகாரத்தில் பெரியார் பல்கலைக்கழகத்தில் காவல்துறையினர் மீண்டும் சோதனை நடத்தினர்.

சேலம் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெகநாதன், பல்கலைக்கழக நிர்வாகத்தில் பல்வேறு முறைகேடுகள் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. குறிப்பாக, போலி ஆவணங்கள் தயாரித்து தனியார் நிறுவனங்களிடம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்ததாக புகார் எழுந்தது.

இதுகுறித்து பல்கலைக்கழகத்தின் சட்ட ஆலோசகர் இளங்கோவன் அளித்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த காவல்துறையினர், ஜெகநாதனை கைது செய்தனர். ஆனால், தற்போது அவர் ஜாமீனில் உள்ளார்.

இந்நிலையில், வழக்கு தொடர்பாக பெரியார் பல்கலைக்கழகத்தில்காவல் துறையினர் சோதனை நடத்தி முக்கிய ஆவணங்களை கைப்பற்றினர்.

இந்நிலையில் பெரியார் பல்கலைக்கழகத்தில் காவல்துறையினர் நேற்று மீண்டும் சோதனை நடத்தினர். பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள 6 இடங்களில் 30க்கும் மேற்பட்ட காவல்துறை யினர் சோதனையில் ஈடுபட்டனர். பெரியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முறை கேடு வழக்கு தொடர்பாக ஏற்கனவே 7 இடங்களில் சோதனை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி முகப்பேர் 92 வது வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகளில் வட்டக் கழகச் செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி பொங்கல் சிறப்பு பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார் இந்நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர் கே. குமரேசன், பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ், மாவட்ட கழக பிரதிநிதி எம்.சி.எழிலரசு, ஏ.ஜி. வேலன், ஏ.சுந்திரி, எம்.என்.ராஜ்கமல், எம்.எஸ்.சந்தானம், எம்.பி.நவகுமார் லீலாவதி எழில் எம்.எஸ். ஜெயசிம்மன்கே.பிரகாஷ்.உள்ளிட்ட வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஏ.எம். ராமசாமி**
**சனவரி 12 (2012)**



**கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**சேலம் மாவட்டம் – ஆத்தூர் நகரச் செயலாளராக நான்கு முறையும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.**

**1989, 1996 ஆகிய இரண்டு முறை ஆத்தூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி – குஜராத் இனப் படுகொலைக்கு

# பா.ஜ.க. அரசே முதன்மைக் குற்றவாளி என நிரூபணம்!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜன.12-

பில்கிஸ் பானு வழக்கில் குற்றவாளிகளுக்கு பா.ஜ.க. ஒன்றிய அரசும்,குஜராத் அரசும் உடந்தையாக இருந்து இனப்படுகொலையை நடத்தியுள்ளன என்று உச்சநீதிமன்றத் தீர்ப்பின் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது என ‘தீக்கதிர்’ நாளேடு 11.01.2024 தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்த தலையங்க விவரம் வருமாறு:-

பில்கிஸ் பானு வழக்கில் குற்றவாளிகளுக்கு பா.ஜ.க.வின் ஒன்றிய அரசும், குஜராத் அரசும் “உதவியாகவும், உடந்தையாகவும்” இருந்திருக்கின்றன என உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருக்கிறது.

இந்திய வரலாற்றில் இது போன்ற கொடூரத்திற்கு எந்த அரசும் இப்படி உடந்தையாக இருந்தது இல்லை. 2002 குஜராத் இனப்படுகொலையின் ஒரு பகுதியான பில்கிஸ் பானு வழக்கில் ஏற்கெனவே உச்சநீதிமன்ற தலையீட்டிற்குப் பின்னர்தான் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டணைவிதிக்கப்பட்டது.

ஆனால் 2022ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று ஒன்றிய மோடி அரசும், குஜராத் அரசும் இணைந்து விடுதலை செய்து தனது கூட்டாளிகளைக் காப்பாற்றியது. நீதி குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. 2002இல் குஜராத் கலவரத்தின் போது, 5 மாத கர்ப்பிணியாக இருந்த பில்கிஸ் பானு சங்பரிவார் கும்பலால் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டார். அவரது மகளும் கொல்லப்பட்டார். இந்தக் கொடூரத்தை அரங்கேற்றிய கும்பலுக்கு பாஜக அரசு ஆரம்பம் முதலே உடந்தையாக இருந்தது.

உச்சநீதிமன்ற தீர்ப்பில் அம்பலமாகியிருக்கிறது. இந்த குற்றவாளிகளைக் காப்பாற்றும் நோக்கில், குஜராத் அரசு இறந்தவர்களின் உடல் களை முறையற்ற விதத்தில் பிரேதப் பரிசோதனை செய்திருக்கிறது. அடையாளம் தெரியாத வகையில் இறந்தவர்களின் தலையையும் துண்டித்திருக்கிறது; இதில் அரசின் சார்பில் இரண்டு மருத்துவர்களும், 5 காவல்



தீக்கதிர்

2024 ஜனவரி 11 வியாழக்கிழமை

பாஜக அரசே குற்றவாளி !

துறையினரும் பங்கேற்றிருக்கின்றனர் என சிபிஐ தனது குற்றப்பத்திரிகையில் தெரிவித்திருக்கிறது.

மேலும் குற்றவாளிகளில் ஒருவரான ராதேஷ்யன் பகவான்ஷா தண்டனையைக் குறைக்கச் சொல்லி குஜராத் உயர்நீதிமன்றத் தில் மனுத்தாக்கல் செய்த போது அது நிராகரிக்கப்பட்டது.

மேலும் தண்டனையைக் குறைக்கும் அதிகாரம் மகாராஷ்டிரா அரசுக்கே உண்டு என்று நீதிமன்றம் தெரிவித்திருந்தது. இதே போல் ஏற்கனவே மகாராஷ்டிரா அரசுக்கு கூட்டு மன்னிப்பு கேட்டு தண்டனையைக் குறைக்கக் கோரிய போது, மும்பை சிபிஐ சிறப்பு நீதிபதி, சிபிஐ கண்காணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையெல்லாம் மேல்முறையீட்டின் போது, குற்றவாளிகளுடன் இணைந்து குஜராத் பா.ஜ.க. அரசும் திட்டமிட்டு மறைத்திருப்பது தற்போதைய தீர்ப்பில் அம்பலமாகியிருக்கிறது. ஆக. 2002 அரங்கேற்றப்பட்ட இனப்படுகொலையில் குஜராத் பாஜக அரசு தான் முதன்மைக் குற்றவாளி என மீண்டும் நிரூபணமாகியிருக்கி றது.

உச்சநீதிமன்றம் இந்த வழக்கில் மூன்றாவது முறையாகத் தலையிட்டு நீதியை நிலைநாட்டியிருக்கிறது. இது தற்காலிக தீர்வுதான். அரசியல் ஆதாயங்களுக்காக நீதியைக் கொல்லும் பாஜக வை அதிகாரத்திலிருந்து தூக்கியெறிந்தால் மட்டுமே, சட்டத்தின் ஆட்சியையும், ஜனநாய கத்தையும் பாதுகாக்க முடியும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### திண்டுக்கல்லுக்கு

# பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 150 சிறப்பு பேருந்துகள் இயக்கம்!

திண்டுக்கல், ஜன. 12-

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னையிலிருந்து திண்டுக்கல், தேனி, பழநி ஆகிய பகுதிகளுக்கு பயணிகள் செல்வதற்கு 150 சிறப்பு பேருந்துகளும் மீண்டும் சொந்த ஊரிலிருந்து சென்னை செல்வதற்கு 150 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன.

மேலும் திருப்பூர் 50, கோவை 75, திருச்சி 30 மற்றும் இதர ஊர்களுக்கு 50 பேருந்துகளும் மற்றும் கூட்டத்தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

திண்டுக்கல், பழனி, திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலிருந்தும் அவற்றினைச் சார்ந்த பகுதிகளிலிருந்தும் சபரிமலைக்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருவதை முன்னிட்டு இப்போக்குவரத்துக் கழகத்தின் மூலம் மேற்கண்ட ஊர்களில் இருந்து குமுளிக்கு 100 சிறப்புப் பேருந்துகள் இயக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அலுவலர்கள் மற்றும் பயணச்சீட்டு ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இச்செய்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் மண்டல பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

### வட்டச் செயலாளர் அ.கதிரேசன் ஏற்பாட்டில்

# 137 ‘ஆ’ வட்டக் கழகத்தினருக்கு பொங்கல் பரிசு வழங்கல்!

### ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா – க.தனசேகரன் – காசிமுத்துமாணிக்கம் – கே.கண்ணன் பங்கேற்பு!

சென்னை, ஜன. 12 -

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்குப் பகுதி 137 ஆ வட்டக் கழகத்தினருக்கு வட்டச் செயலாளர் ஆ.கதிரேசன் ஏற்பாட்டில் தமிழர் திருநாளையொட்டி இன்று (12.1.2024 - மாலை 4 மணிக்கு) வட்டக் கழக அலுவலகத்தில் பொங்கல் பரிசு வழங்கப்படுகிறது.

தமிழர் திருநாள் பொங்கல் திருநாளையொட்டி, மாவட்டச் செயலாளரும அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப் படி, 137 ஆ வட்டக் கழகத்தினர் 500 நபர்களக்கு பொங்கல் பரிசாக வேட்டி-சட்டை, பேண்ட், சட்டை , சேலை ஆகியவற்றை வட்டச்செயலாளர் அ.கதிரேசன் ஏற்பாட்டில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர் ராஜா , மாநகராட்சி தணிக்கைக் குழுத் தலைவர் க. தனசேகரன், கழக வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், பகுதிச்செயலாளர் கே.கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், மாவட்ட அமைப்பாளர்கள் சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு வழங்குகின்றனர்.

எனவே நமது வட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள், முன்னணயினர், அணிகளின் நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் அ.கதிசேரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

### நாளை 13–ஆம் தேதி காலை பம்மலில் நடைபெறுகிறது

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

### மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நாளை 13.1.2024 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் பம்மல், இரட்டைபிள்ளையார் கோயில் சந்திப்பு அருகே அமைந்துள்ள எஸ்.எஸ். மகால் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மாவட்ட கழக தகவல் தொழில்நுட்ப அணி முன்னின்று நடத்தும் இப்பயிற்சி வகுப்பில் கழக நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட இளைஞரணி – மாணவரணி – மகளிரணி – தொண்டரணி – தொழிலாளர் அணி – வழக்கறிஞர் அணி – பொறியாளர் அணி – மருத்துவ அணி – விளையாட்டு மேம்பாட்டு அணி – சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு – விவசாய அணி – விவசாய தொழிலாளர் அணி – சுற்றுச்சூழல் அணி – அயலக அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் இதனையே அழைப்பாக ஏற்று, தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.





எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99, புரசைவாக்கம், சுந்தரம் தெருவிலுள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமை தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் பார்வையிட்டு, அம்முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார். முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் யு.விஜயபோஸ், கி.புஷ்பராஜ், கோமகன், பிரசாத், பாண்டியன், கோவிந்தன், வினோத், ஒ.கோட்டி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்!

## முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!



தலைமைச் செயலகத்தில் நேற்று (11.01.2024), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் – 2023 போட்டியை தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 4 மாவட்டங்களில் வரும் ஜனவரி 19 முதல் 31–ந் தேதி வரை நடத்துவது தொடர்பான நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இந்திய விளையாட்டு ஆணையத்தின் துணை இயக்குநர் ஏக்தா விஷ்னோய் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை, ஜன. 12 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 நடத்துவதற்காக முன்னேற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் நிர்வாகக் குழுவினரிடம் ஆலோசனை மேற்கொண்டார். இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முன்னிலை வகித்தார். தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய இடங்களில் 2024 ஜனவரி 19 முதல் 31 வரை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன. கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் மொத்தம் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து, 18 வயதுக்கு உட்பட்ட பிரிவில் சுமார் 6000க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர் வீராங்கனைகளும் 1600க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களும் பங்கேற்க உள்ளனர். மேலும், 1000க்கும் மேற்பட்ட நடுவர்கள் மற்றும் 1200க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இந்த ஆண்டு 27 பிரிவுகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் டெமோ விளையாட்டுகளில் (Demo Sports) இடம்பெறுகிறது.

போட்டி நடைபெறும் இடங்கள் & அட்டவணை, உள்கட்டமைப்பு நிலை, வரவேற்பு/நெறிமுறை, போக்குவரத்து, துவக்க & நிறைவு விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நகரங்கள், குடிநீர் வழங்கல் & சுகாதார வசதி, போட்டி நடைபெறும் நாளுக்கான நிகழ்வு மேலாண்மை, ஊடகம் & பத்திரிகை, விளம்பரப்படுத்துதல், போட்டி நடத்தும் மாநிலம்/மாவட்டத்தை முடுக்கிவிடுதல், பாதுகாப்பு ஏற்பாடுகள், பரிசு விநியோகம், மருத்துவச் சேவைகள், தங்குமிடம், சுகாதாரம் & உணவு வழங்குதல், விளையாட்டு மைதானங்களுக்கான நிர்வாகக் கட்டமைப்பு, மேடை ஏற்பாடுகள், மின்சார விநியோக வசதி, முக்கியச் சாலைகள் & சாலைத் தளவாடங்கள், இந்திய அரசு/மாநில அரசு ஒருங்கிணைப்பு, மாநில ஒருங்கிணைப்பு & கட்டுப்பாட்டு அறை, அங்கீகார அட்டைகள், தொழில்நுட்பம் & தகவல் தொழில்நுட்பச் சேவைகள், பார்வையாளர்களுக்கான அடிப்படை வசதிகள், பண்பாட்டுப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, இந்திய விளையாட்டு ஆணையத்தின் துணை இயக்குநர் ஏக்தா விஷ்னோய், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசுச் செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு அரசின் ‘அயலகத் தமிழர் தினம் 2024’ல் பங்கேற்பதற்காக சென்னைக்கு வருகை தந்திருக்கும் சிங்கப்பூர் நாட்டின் உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா.சண்முகம் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்து பேசினார். அதுபோது இருவரும் தமிழ்நாட்டிற்கும் சிங்கப்பூருக்கும் இடையே உள்ள நீண்ட நெடிய பண்பாடு மற்றும் கலாச்சார உறவுகளையும் அவற்றை இன்னும் வலுப்படுத்துவதற்கான முயற்சிகளையும் பற்றி பல்வேறு கருத்துகளை பரிமாறிக்கொண்டனர்.

### வட்டச் செயலாளர் அ.மோசஸ் தலைமை!

## மதுரவாயல் 151 -வது வட்டத்தில் பொங்கல் விழா!

### காரம்பாக்கம் கணபதி நல உதவிகள் வழங்குகிறார்!

*சென்னை, ஜன. 12-*

*மதுரவாயல் தெற்குப் பகுதி 151 -வது வட்டக் கழகம் சார்பில் வட்டச் செயலாளர் அ.மோசஸ் ஏற்பாட்டில் 3000 பேருக்கு நல உதவிகளை பகுதிச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் கணபதி வழங்குகிறார்.*

*சென்னை தெற்கு மாவட்டம். மதுரவாயல் தெற்கு பகுதி 151வது வட்ட செயலாளர் அ.மோசஸ் ஏற்பாட்டில் இன்று (12.1.24 வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு வளசரவாக்கம் எஸ்.வி.எஸ். நகரில் பொங்கல் திருநாளை முன்னிட்டு 3000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.*

*இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதிகள் வி.விஜயன் ஆர்.சேகர். மாமன்ற உறுப்பினர் ச.சங்கர்கணேஷ், செ.ராமையா, ம.சிவா, கே.முரளி, கு.விமலா, வி.பன்னீர்செல்வம், கோ.கண்ணதாசன், ஆர்.முரளிகிருஷ்ணன், ப. சரவணன், மோ.சுந்தர், கே.குமார், ஈ.பிரசாந்த், பூத்தப்பேடு, ரகு, லோகேந்திர பாபு, சீனு, என்.துரை, ஆட்டோ கிருஷ்ணன், தங்கராஜ். பி.இளங்கோவன், கே.தீபன்,வி.பாலு, பாக்சர் செந்தில்குமார், சின்னைய்யா, ரங்கன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

# ராமர் கோயில் திறப்பு விழா புறக்கணிப்பு !

### காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அறிவிப்பு!

புதுடெல்லி, ஜன.12–

ராமர் கோயில் திறப்பு விழாவை புறக்கணிப்பதாககாங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அடுத்தடுத்து அறிவித்துள்ளன.

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் வரும் 22ம் தேதி நடக்கும் ராமர் கோயில் திறப்பு விழா, ஆன்மிக விழா அல்ல என்றும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். ஏற்பாடு செய்துள்ள அரசியல் விழா என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

கட்டுமானப் பணி முழுமையாக முடியாத நிலையில், ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க. தலைவர்கள், தேர்தல் ஆதாயத்துக்காக அவசரமாக ராமர் கோயில் திறப்பு விழாவை நடத்துவதாக காங்கிரஸ் கூறியுள்ளது.

ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. நிகழ்ச்சி என தெளிவாக தெரிவதால், மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி, ஆதிர் ரஞ்சன் சவுத்ரி ஆகியோர் பங்கேற்க மாட்டார்கள் என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

மார்க்சிஸ்ட் கட்சியும் திறப்பு விழாவை புறக்கணித்துள்ளது.

ராமர் கோயில் திறப்பு விழா அரசியல் நாடகம் என மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி விமர்சித்துள்ளார்.

இதேபோல், விஷ்வ இந்து பரிஷத் அமைப்பின் செயல் தலைவர் அலோக் குமார் விடுத்த அழைப்பை சமாஜ்வாதி தலைவரும், உத்தரப்பிரதேச முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவ் நிராகரித்துள்ளார். அழைப்பிதழே வரவில்லை என ஆம் ஆத்மி மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் தெரிவித்துள்ளன. ராமர் பா.ஜ.க.வுக்கு மட்டும் சொந்தம் இல்லை என உத்தவ் தாக்கரேவின் சிவசேனா விமர்சித்துள்ளது.

### எழும்பூர் தொகுதி வார்டு 99-ல்

## மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம்!

### இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. ஆய்வு!

*சென்னை,ஜன.12-*

*எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99, புரசைவாக்கம், சுந்தரம் தெருவிலுள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமை தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் பார்வையிட்டு, அம்முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் யு.விஜயபோஸ், கி.புஷ்பராஜ், கோமகன், பிரசாத், பாண்டியன், கோவிந்தன், வினோத், ஓ.கோட்டி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.*

### பொங்கல் பண்டிகை:

## சென்னை - கோவை இடையே சிறப்பு ரயில்!

### தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, ஜன. 12 -

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னை - கோவை இடையே சிறப்பு ரயில் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித் துள்ளது. பொங்கல் பண்டி கையை சொந்த ஊர்களில் கொண்டாட செல்லும் பொதுமக்கள் வசதிக்காக சிறப்பு பஸ்கள், ரயில்கள் அறிவிக்கப்பட்டு உள்ளன.

இதுகுறித்து தெற்கு ரயில்வே வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

பொங்கல் பண்டிகை முன்னிட்டு பயணிகளின் வசதிக்காக சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. அதன்படி சென்னை - கோவை - சென்னை இடையே சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. அதன்படி ஜன.16, 17ம் தேதிகளில் கோயம்புத்தூரில் இருந்து தாம்பரத்திற்கு இயக்கப்படும் சூப்பர் பாஸ்ட் சிறப்பு ரயில் (எண்.06086) இரவு 8.45 மணிக்கு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 5.20 மணிக்கு தாம்பரம் வந்து சேருகிறது. தாம்பரத்தில் இருந்து 17, 18ம் தேதிகளில் இயக்கப்படும் சிறப்பு ரயில் காலை 7.30 மணிக்கு புறப்பட்டு மாலை 4.30 மணிக்கு கோயம்புத்தூர் சென்றடைகிறது.





நன்றி நன்றி
தூத்துக்குடி மாவட்ட தொழில் வளர்ச்சிக்கும்
பல்லாயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பிற்கும்
பெரும் பாய்ச்சல் முன்னேற்றம் ஏற்பட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில்
ரூ.84,522 கோடி பெற்றுத் தந்த
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
தி.மு.க தலைவர் அவர்களுக்கு தூத்துக்குடி மாவட்ட மக்களின் சார்பாக
நெஞ்சார்ந்த நன்றி. நன்றி.. நன்றி...
ARASU ARTS
அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்
மீன்வளம், மீனவர் நலன் (ம) கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்
தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர்




# பொங்கல் விழா – 2024

துறைமுகம் சட்டமன்றத் தொகுதி
பொங்கல் விழாவில் நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தரும்
மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்

## உதயநிதி ஸ்டாலின்

*அவர்களே வருக. வருக..*

**தயாநிதி மாறன்** எம்.பி.
விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர்

*மகிழ்வுடன் வரவேற்று மகிழும்*

**பி.கே.சேகர்பாபு**
இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் – மாவட்ட கழக செயலாளர்

**சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.**









சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், நேற்று (11.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2024 விழாவை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் கலாநிதி வீராசாமி, எம்.எம்.அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் எ.எம்.வி.பிரபாகரராஜா, அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் ஐ.லியோனி, பொதுத் துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், நேற்று (11.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2024 விழாவில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினைத் திறந்து வைத்தார். இவ்விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் கலாநிதி வீராசாமி, எம்.எம்.அப்துல்லா, அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, பொதுத் துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## உலகத் தமிழர் நலனுக்காக உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் - வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு

# பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது ‘திராவிட மாடல்’ அரசு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஜன.12–**

**உலகத் தமிழர் நலனுக்காக உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில் தெரிவித்தார்.**

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அயலக தமிழர் நல வாரியம் சார்பில் அயலக தமிழர் தின விழாவை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

தாய் தமிழகம் வந்துள்ள அயலகத் தமிழர்களே, உங்கள் அத்தனை பேருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களையெல்லாம் சந்திப்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன். தமிழ்நாடு அயலகத் தமிழர்கள் நலன் மற்றும் மறுவாழ்வு துறையின் சார்பாக, அயலகத் தமிழர் தின நிகழ்ச்சியைத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாளைய தினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த நிகழ்விலே கலந்து கொண்டு நிறைவுரை ஆற்ற உள்ளார்கள். இந்தியாவில் இருக்கக்கூடிய மாநில கட்சிகளிலேயே அயலகத் தமிழர்களின் நலனுக்காக ‘ அயலகத் தமிழர் அணி’யைத் தொடங்கியது, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

இன்னும் சொல்லப்போனால், நேற்று மாலையிலிருந்து நான் இந்த அயலகத் தமிழர்களோடு தான் பயணித்துக் கொண்டிருக்கின்றேன். நேற்று மாலை அயலக அணியின் சார்பாக அயலக அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டேன். இன்று இந்தத் துறையைச் சார்ந்த நிகழ்ச்சியிலே, நான் கலந்துகொள்கிறேன்.

### வழிகாட்டி வரும் தமிழ்நாடு அரசு!

இந்திய ஒன்றியத்திற்குப் பல்வேறு வழிகளில் வழிகாட்டி வரும் தமிழ்நாடு அரசு 2021--ஆம் ஆண்டில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையை உருவாக்கியது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டில் வசிக்கின்ற தமிழர்களுக்காக மட்டுமல்ல, உலகமெங்கும் வசிக்கின்ற தமிழ் மொழி பேசுகின்ற அத்தனை பேருக்காகவும் உழைத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அப்படிப்பட்ட கலைஞரின் நூற்றாண்டில் இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருப்பது நமக்கு இன்னும் கூடுதல் மகிழ்ச்சி, கூடுதல் பெருமை. அதிலும் அயலகத் தமிழர் தினமானது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அதிகம் உச்சரிக்கப்பட்ட `தமிழ் வெல்லும்’ என்கிற அந்தக் கருப்பொருளில் நடைபெற்றுக் கொண்டிருப்பது கூடுதல் மகிழ்ச்சியைத் தருகின்றது.

இந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சியை ஒட்டி அயலக நலத்துறை சார்பாக கடந்த மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்த புகைப்படக் கண்காட்சியையும் தொடங்கி வைத்து அவற்றையும் பார்த்துவிட்டுத்தான் இங்கு வந்திருக்கின்றேன்.

### தனித்தனியாகப் பயணிக்க வேண்டும்!

இரண்டு நாட்கள் நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில் உலகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் பங்கேற்று உள்ளீர்கள். குறிப்பாக சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற 58 நாடுகளிலிருந்து அமைச்சர்களாக, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக, தொழில்துறையினராக, கவிஞர்களாக வசித்து வருகின்ற தமிழர்கள் இங்கே வருகை தந்திருக்கிறீர்கள். உங்களை எல்லாம் நான் வருக வருக என்று வரவேற்கின்றேன்.

உங்களை எல்லாம் நான் சந்திக்க வேண்டும் என்றால், கிட்டதட்ட 58 நாடுகளுக்குத் தனித்தனியாக நாங்கள் பயணம் செல்ல வேண்டும். அப்படியே வந்தாலும், உங்களை சந்திப்பதற்கு நேரம் கிடைப்பது மிகவும் அரிது. ஆனால், இன்றைக்கு உங்கள் அனைவரையும் ஒரே இடத்தில் நம்முடைய தாய் திருநாட்டில் சந்திப்பது உள்ளபடியே மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் தருகின்றது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில், துபாய், சிங்கப்பூர், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான பயணத்தை மேற்கொண்டார்கள்.

### வாழ்த்துகளுக்கு நன்றி!

அப்பொழுது நீங்கள் எல்லாம் அவரை சந்தித்து உங்களுடைய பாசத்தையும் அன்பையும் வெளிப்படுத்தியிருந்தீர்கள். அதற்கு இந்த நேரத்தில் தமிழ்நாட்டின் சார்பாக, எங்களுடைய நன்றியை நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம். அதேபோல், நான் வெளிநாடுகளுக்கு வரும்போதெல்லாம் என்னிடத்தில் வந்து அன்போடு விசாரித்து, உங்களுடைய இல்லத்திற்கு அழைத்து, `நல்லா இருக்கீங்களா, அப்பா- அம்மா நல்லா இருக்காங்களா?’ என்று என்னுடைய குடும்பத்தையும் விசாரித்து, எங்களுடைய ஆட்சியையும் நீங்கள் வாழ்த்தி இருக்கிறீர்கள். அதற்கும் இந்த நேரத்திலே நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.



நான் விளையாட்டுத் துறைக்கு அமைச்சராக இன்றைக்கு நான் உங்கள் முன் பேசிக் கொண்டிருக்கின்றேன். இந்த நேரத்தில் ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகின்றேன். நம்முடைய தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உலகம் முழுவதும் நடைபெறுகின்ற பல்வேறு சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க உலகின் பல்வேறு நாடுகளுக்கு பயணமேற்கொள்கிறார்கள். அப்படிப் பங்கேற்பதற்காக நீங்கள் இருக்கக்கூடிய நாடுகளுக்கு வரும்பொழுது அவர்களை களத்தில் ஊக்குவிப்பவர்களாக, உற்சாகப்படுத்துபவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். அதற்கு இந்த நேரத்தில் விளையாட்டுத் துறையின் சார்பாக என்னுடைய அன்பையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அயலகத் தமிழர் நல வாரியம்!

இதுபோன்ற சந்திப்புகள் உண்மையில், நமக்கு இடையேயான பாசத்தை இன்னும் அதிகமாக்கும் என்று நான் நம்புகின்றேன். அயலகத் தமிழர்கள் நலனில், நம்முடைய கழக அரசு மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகின்றது. அதற்கு ஒரு உதாரணமாகத்தான் `அயலகத் தமிழர் நல வாரிய’த்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருப்பது.

பண்டைய காலத்தில் தமிழகம் உலகெங்கும் பரவி வாழ்ந்தார்கள். அதேபோன்ற ஒரு நிலை கடந்த 20 ஆண்டுகளில் 25 ஆண்டுகளில் மிகவும் அதிகமாக இருக்கின்றது. முன்பைவிட, இப்பொழுது நம்முடைய தமிழர்கள் பல்வேறு நாடுகளில் படிப்பதற்காகவும், பணிகள் மற்றும் வேலைகள் பார்ப்பதற்காகவும் பல்வேறு நாடுகளில் எல்லாம் தங்கி இருக்கின்றார்கள். எங்கு போனாலும் எந்த நாட்டிற்குப் போனாலும் தமிழ் பேசுகின்ற மக்களைக் காண முடிகின்றது.

### 135 நாடுகளில் தமிழர்கள்

கிட்டதட்ட 135 நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டுதான் இந்தத் துறையை நம்முடைய திராவிட மாடல் அரசு உருவாக்கியது.

முன்பெல்லாம் செய்தித்தாள்களை எடுத்தால், வெளிநாட்டில் வேலை எனக் கூறி ஏஜெண்டுகள் ஏமாற்றினார்கள் என்ற செய்தியை தினசரி பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால், அந்த நிலை இன்றைக்குப் பெருமளவு மாறி இருக்கின்றது. ஏனென்றால், அயலகத் தமிழர் நலத்துறை மேற்கொண்ட பணிகளே இதற்கு முக்கியக் காரணம். சட்டபூர்வமாக வெளிநாடுகளில் வேலை வாய்ப்பை பெற வழிகாட்டும் விதமாக ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற நிறுவனம் செயல்பட்டு வருகின்றது.

சில மாதங்களுக்கு முன்பு செவிலியர்களுக்கு வளைகுடா நாடுகளில் உள்ள வேலைவாய்ப்பு பற்றி ஓவர்சீஸ் மேன் பவர் கார்ப்பரேசன் கமிட்டி நடத்திய கருத்தரங்கினை நான் தொடங்கி வைத்து உரையாற்றினேன்.

வெளிநாடு செல்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது மட்டுமல்ல, பணிக்காக அயல்நாடுகளுக்குச் செல்லும் தமிழர்களின் நலனைக் காப்பதிலும் நம்முடைய அயலகத் தமிழர் நலத்துறை முன்வரிசையில் இருக்கின்றது. அங்கு ஏதேனும் சிக்கல் ஏற்பட்டாலோ, பணிக்கு எடுத்த நிறுவனங்களால் பாதிப்பு ஏற்பட்டாலோ அயலகத் தமிழர் நலத்துறைக்குத் தகவல் தெரிவித்தால், உடனே பாதிக்கப்பட்டவர்களைத் தொடர்புகொண்டு அவருடைய பிரச்சினையைத் தீர்க்கும் மீட்கும் பணியை நம்முடைய துறை மேற்கொள்கின்றது.

மீட்பது மட்டுமின்றி அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதனால்தான் இந்தத் துறை வெறும் அயலகத் தமிழர் நலத்துறை என்று மட்டும் சொல்லாமல், அயலகத் தமிழர் நலத்துறை மற்றும் மறுவாழ்வுத்துறை என்று சொல்கின்றோம்.

### மிகப்பெரிய ஒரு சாதனை!

வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் பொழுது அங்கு தமிழர்கள் உயிரிழந்தால் முன்பெல்லாம் அவர்களுடைய உடலை, தங்களுடைய சொந்த ஊருக்குக் கொண்டு வருவதற்குக் குறைந்தது எட்டு மாதத்தில் இருந்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகும். ஆனால், நம்முடைய துறையின் சார்பாக எடுத்திருக்கின்ற பல்வேறு முயற்சிகளால் இறந்தவரின் உடலை எட்டிலிருந்து பத்து நாட்களுக்குள் அவர்களுடைய குடும்பத்துடன் நாம் சேர்த்துக் கொண்டு இருக்கின்றோம். இது மிகப்பெரிய ஒரு சாதனை. இந்த நிலை முழுவதும் மாறி இருக்கின்றது.

### இஸ்ரேல் - பாலஸ்தீன போரில் செவிலியர் பாதுகாப்பு!

சமீபத்தில் நடந்த உக்ரைன், ரஷ்யா போரின் பொழுது அந்த நாடுகளில் படித்த நம் மாணவர்களைப் பத்திரமாக மீட்டு, தமிழ்நாடு அழைத்து வந்தது நம்முடைய அயலகத் தமிழர் நலத்துறைதான். அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இதேபோல இஸ்ரேல் - பாலஸ்தீன போரின் பொழுதும் அங்குள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், செவிலியர்களைத் மீட்டுக் கொண்டு வந்தது இந்த அயலகத் தமிழர் நலத்துறைதான்.

தமிழ்நாடுவாழ் தமிழர்களுக்கு எப்படித் திட்டங்கள் தீட்டப்படுகின்றதோ, அதேபோல வெளிநாடு வாழ் தமிழர்களுக்கும் பல்வேறு திட்டங்களை நம்முடைய துறை மூலம் செயல்படுத்தி வருகின்றது. குறிப்பாக உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுடைய பிள்ளைகள் தமிழ் மொழியைக் கற்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு பாடநூல் கழகம் சார்பாக நூல்களை வழங்கி, அவர்கள் தமிழ் கற்பதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தந்து வருகின்றது. தமிழர்கள் பல நாடுகளில் தொழில் முனைவோராக உள்ளார்கள். அவர்களையெல்லாம் ஒருங்கிணைக்கின்ற விதமாகவும் பல்வேறு பணிகள் நம்முடைய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### உலகத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு விருது!

இரண்டு நாட்களுக்கு முன்பு இதே அரங்கில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான தமிழ் தொழில் முனைவோர்கள், பங்கேற்றவர்கள். அயலகத் தமிழர்களுடைய தமிழ் வளர்ச்சிப் பணிகளைப் போற்றுகின்ற வகையில் உலகத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு விருதுகளையும் பரிசுகளையும் நம்முடைய கழக அரசு தொடர்ந்து வழங்கி வருகின்றது.

இந்தப் பணிகள் அனைத்தும் அயலக தமிழர் நலத்துறை மற்றும் மறுவாழ்வுத் துறையின் வாயிலாகவே சாத்தியமாகின்றது. இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் அமைச்சர்கள், கவிஞர்கள், தொழில் முனைவோர்கள் எனப் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெரியவர்கள் பங்கேற்று பேச உள்ளார்கள். இந்த அயலகத் தமிழர் தினம் 2024 மிகப்பெரிய வெற்றியைப்பெற என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு, இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்த நம்முடைய அமைச்சர் மஸ்தான் அவர்களுக்கும் துறை சார்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அயலகத் தமிழர் நலவாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி வரவேற்புரை ஆற்றினார். அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறையினுடைய ஆணையர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் திட்டக்குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, அப்துல்லா, தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லியோனி , சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, மலேசியா, இலங்கை, மொரீஷியஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனோ கணேசன், சாணக்கியன் ராசமாணிக்கம், மலேசியாவின் முன்னாள் அமைச்சர் டத்தோ கமலநாதன், வழக்கறிஞர் புகழ் காந்தி, சிங்கப்பூர் ராம், சிங்கப்பூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தினகரன், டெக்டான் குழுமத் தலைவர் லட்சுமணன், விஸ்வா லோட்டஸ் குழுமத் தலைவர் துரை சிங்கம், ஏர் மொரீஷியஸ் தலைவர் மார்பே வெங்கடசாமி, மருத்துவர் ராமசாமி தனபால், சிங்கப்பூர் நாவுக்கரசு, கனடாவைச் சேர்ந்த சுபாஷ் சுந்தர்ராஜ், மலேசியாவை சேர்ந்த முகமது இக்பால் ராவுத்தர், லண்டன் ஃபைசல், தமிழ்ப் பல்கலைகழக முன்னாள் துணை வேந்தர் மா.ராசேந்திரன், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை அரசு செயலர் நந்தகுமார் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக இளைஞரனி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் மக்களுக்காகவும், சென்னை மாநகருக்காகவும் அயராது உழைத்துக் கொண்டிருக்கின்ற முன்களப் பணியாளர்கள் 1700 குடும்பங்களுக்கு, சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு ஏற்பாட்டில் பொங்கல் தொகுப்பினை வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் இந்த விழாவில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதி பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் – மின்சார வாரியம் ஆகியவற்றில் பணிபுரிகின்ற முன்களப் பணியாளர்கள் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (11.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, விளையாட்டுத் துறையில் தலைசிறந்து விளங்கும் வீரர், வீராங்கனைகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படும் உயரிய விருதான ”வாழ்நாள் சாதனையாளர் தயான் சந்த் விருது பெற்ற கபடி வீராங்கனை திருமதி. கவிதா செல்வராஜு நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, உடனிருந்தனர்.

## பா.ஜ.க. வின் பாச வலையிலிருந்து

# அ.தி.மு.க. விரிக்கும் மோச வலையை சிறுபான்மை மக்கள் நம்ப மாட்டார்கள்!

### 'நியூஸ் 18' செய்திகள் தொலைக்காட்சி 'சொல்லதிகாரம்' நிகழ்ச்சியில் 'தீக்கதிர்' சிறப்பாசிரியர் மதுக்கூர் இராமலிங்கம் வாதம் !

சென்னை,ஜன.12-

தீக்கதிர் சிறப்பாசிரியர் மதுக்கூர் இராமலிங்கம் நியூஸ் 18 செய்திகள் தொலைக்காட்சியில் சொல்லதிகாரம் நிகழ்ச்சியில் பங்கேற்று முன்வைத்த கருத்துகள் வருமாறு:

அண்மையில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கு சிறுபான்மை மக்களின் பாதுகாவலர் என்ற பட்டமும் கொடுத்து, ஒரு வீர வாளையும் கொடுத்தார்கள். அந்த வாள் மதச்சார்பின்மையை வெட்டி வீழ்த்திய வாள் ஆகும்.

ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது குஜராத் மோடி அரசைப் பின்பற்றி மதமாற்றத் தடைச் சட்டம் மற்றும் ஆடுகோழி பலியிடத் தடைச் சட்டம் கொண்டுவந்தார். தேர்தல் தோல்விக்குப் பிறகு அந்தச் சட்டங்களை திரும்பப் பெற்றுக் கொண்டார் என்பது நேற்றைய வரலாறு.

அயோத்தியில் பாபர் மசூதியை இடிக்க கரசேவகர்களை ஜெயலலிதா அனுப்பிவைத்தார் என்று பா.ஜ.க.வைச் சேர்ந்த சுப்பிரமணிய சுவாமி கூறியது மறந்துவிடக் கூடியதல்ல. இராமருக்கு அயோத்தியில் கோவில் கட்டாமல் வேறு எங்கே கட்டுவது என்று ஏகடியம் பேசியவர் தான் ஜெயலலிதா.

ஒரு நிலையில், பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தது நான் செய்த தவறு. இனி அந்தத் தவறைச் செய்யமாட்டேன் என்றார் ஜெயலலிதா. அவருடைய மறைவிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த எடப்பாடி பழனிசாமியின் அமைச்சர்கள் மோடி எங்கள் டாடி என்று கொஞ்சிக் குலாவினார்கள்.

பழைய கதை இருக்கட்டும். பில்கிஸ் பானு கும்பல் பாலியல் வல்லுறவுக் குற்றவாளிகளை குஜராத் பா.ஜ.க. அரசு முன் விடுதலை செய்ததை உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது. குஜராத் பா.ஜ.க. அரசு செய்தது அப்பட்டமான பிராடு என உச்சநீதிமன்றம் ஓங்கிக் குட்டியுள்ளது. பில்கிஸ் பானு நீதிக்காக நடத்திய நெடிய போராட்டம் வெற்றி பெற்றுள்ளது என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் உச்சநீதிமன்றத் தீர்ப்பை வரவேற்று அறிக்கை விடுத்துள்ளார்.

ஆனால், பா.ஜ.க.வுடன் இனி எப்போதும் கூட்டு இல்லை என்று ஊர் ஊராகச் சென்று சத்தியம் செய்யும் எடப்பாடி பழனிசாமி இது பற்றி மூச்சுவிட மறுப்பதேன்? பழைய பாசமா அல்லது பயமா?

ஒருவேளை, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.விற்கு தப்பித் தவறி ஒன்றோ, இரண்டோ இடம் கிடைத்தால் ஒன்றியத்தில் யார் ஆட்சியமைக்க அதிமுக ஆதரவளிக்கும் என எடப்பாடி பழனிசாமி சொல்லத் தயாரா? தமிழ்நாட்டிலும் புதுவையிலும் அந்தக் கட்சிக்கு ஒரு இடம் கூடக் கிடைக்கப்போவதில்லை. எனவே, அந்தக் கவலை எங்களுக்கு இல்லை என்று அ.தி.மு.க. நினைக்கிறதா?

'குடியுரிமை திருத்தச் சட்டத்தை கூட்டணி தர்மத்திற்காக ஆதரித்து விட்டோம். அது தவறு தான. இனி அந்தத் தவறை செய்யமாட்டோம்' என்று பாவமன்னிப்புக் கேட்கிறார் பழனிசாமி. நாடாளுமன்ற மாநிலங்களவையில் அ.தி.மு.க. அந்தச் சட்டத்தை ஆதரித்ததால் தான் அது நிறைவேறியது. அந்தப் பாவத்திற்கு அதிமுகவும் பொறுப்பேற்க வேண்டும். சிறுபான்மை இஸ்லாமிய மக்களுக்கு மட்டுமல்ல, ஈழத் தமிழர்களுக்கும் இந்தச் சட்டத்தை ஆதரிப்பதன் மூலம் இரட்டைத் துரோகம் செய்தது அதிமுக.

'நாடாளுமன்றத்தில் ஆதரித்தது மட்டுமல்ல. இந்தச் சட்டத்தால் யாருக்குப் பாதிப்பு?' என்று அப்போது முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமி நியாயப்படுத்தினார். குடியுரிமைச் சட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் சிறுபான்மை இஸ்லாமிய மக்கள் ஷாகின் பாக் அமைத்துப் போராடினார்கள். சென்னை வண்ணாரப்பேட்டையில் அமைதியாகப் போராடியவர்கள் மீது கொடூரத் தடியடி நடத்தியது எடப்பாடி பழனிசாமி ஆட்சி தானே? அது ஒருபுறமிருக்க, இப்போது கூட ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா குடியுரிமை திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி விட்டோம். இப்போது நடைமுறைப்படுத்தப் போகிறோம் என மிரட்டுகிறாரே, இதை நடைமுறைப்படுத்தவிட மாட்டோம் என அறிக்கை விட எடப்பாடி பழனிசாமியைத் தடுப்பது எது?

கொரோனா கொடுங்காலத்தில் அந்தக் கொடிய நோயை இஸ்லாமிய மக்களோடு இணைத்து விஷமப் பிரச்சாரம் செய்தது யார்? தில்லியில் நடைபெற்ற தப்லீக் ஜமாஅத் மாநாட்டில் பங்கேற்ற முஸ்லிம்களால் தான் கொரோனா பரப்பப்பட்டது என ஒன்றிய மோடி அரசு பொய் பரப்பியது. தமிழ்நாட்டில் "சிங்கிள் சோர்ஸ்" என இதை அழைத்து அன்றாடம் பேட்டி கொடுத்தது அ.தி.மு.க. ஆட்சியில் தானே.



மதுக்கூர் ராமலிங்கம்
எழுத்தாளர்

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்டெயின்ஸ் பாதிரியார் பொய் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையிலேயே மரணமடைந்த போது மோடி ஆட்சியை அ.தி.மு.க. கண்டித்ததா? ஜம்மு காஷ்மீரில் ஆசிபா என்ற சிறுமி கொடூரமாக பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு மத வெறியர்களால் கொல்லப்பட்டதை அ.தி.மு.க. கண்டித்ததா? மாட்டிறைச்சியின் பெயரால் சிறுபான்மை மற்றும் தலித் மக்கள் கொல்லப்பட்டபோது அ.தி.மு.க. கண்டித்ததுண்டா? அதெல்லாம் போகட்டும், மணிப்பூரில் கிறிஸ்தவ குக்கி இன மக்கள் இரட்டை எஞ்சின் ஆட்சிகளின் ஆசியோடு படுகொலை செய்யப்பட்டார்கள். பெண்களை நிர்வாணப்படுத்தி, நடு ரோட்டில் இழுத்து வந்து கும்பல் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினார்கள். பிரதமர் மோடி இப்போது வரை மணிப்பூர் பக்கமே எட்டிப்பார்க்கவில்லை. நாடாளுமன்றத்தில் திமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கட்சிகள் இதற்காகப் போராடின. ஆனால், அ.தி.மு.க., பா.ஜ.க.வைக் கண்டு பதுங்கியது, பம்மியது.

பாஜக கூட்டணியில் நாங்கள் இல்லை. எங்களுக்குக் கொள்கை முக்கியம் என்கிறாரே எடப்பாடியார். நாடாளுமன்றத்திற்கே பாதுகாப்பில்லாமல் அத்துமீறி இருவர் நுழைந்து புகைக் குண்டுகளை வீசிய போது மோடி அரசை அ.தி.மு.க. கண்டித்ததா? இதை எதிர்த்துப் போராடிய தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 146 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டபோது அ.தி.மு.க. கண்டித்ததா?

மோடி ஆட்சியின் மோசமான கொள்கைகளை எதிர்த்து நாங்கள் கூட்டணியை விட்டு வெளியேறுகிறோம் என்று கூறும் திராணி அ.தி.மு.க.விற்கு இல்லை. மாறாக, மோடி ஆட்சியைப் பற்றி ஒரு வார்த்தை கூட கண்டிக்க இவர்கள் தயாராக இல்லை. இவர்களை நம்ப தமிழ்நாட்டு மக்களும் தயாராக இல்லை.

சிறையில் உள்ள இஸ்லாமியர்களை விடுவிக்கக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு திமுக அரசு அனுப்பியது. முக்கியமான மசோதாக்களை ஆளுநர் முடக்கி வைத்திருப்பதை உச்சநீதிமன்றம் கண்டித்தது. இதற்கான வழக்கை மாநில திமுக அரசு தொடுத்தது. தமிழ்நாட்டிற்கு அனைத்து வகையிலும் எதிராக உள்ள இப்போதைய ஆளுநரோடு அதிமுக இணக்கமாக உள்ளது. இஸ்லாமிய சிறைவாசிகளை விடுவிக்கக் கோரும் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென ஆளுநரைச் சந்தித்து அழுத்தம் கொடுக்க அதிமுக தயாரா?

இஸ்லாமிய சமூகத்தினருக்கு இட ஒதுக்கீடு வழங்க மாநில அரசுகள் முன்வந்தபோது மத ரீதியாக இட ஒதுக்கீடு வழங்கக் கூடாது என நீதிமன்றம் தடுத்தது. கலைஞர் முதல்வராக இருந்தபோது பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாக இஸ்லாமியருக்கு 3.5 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கினார். அதனால் தான் தமிழ்நாட்டில் இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீடு நிலை நிறுத்தப்பட்டது. மதம் மாறிய தலித் கிறிஸ்தவர்களுக்கும் தலித் மக்களுக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளை வழங்கவேண்டுமென திமுக அரசு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியுள்ளது. இந்தப் பிரச்சனையில் அ.தி.மு.க. துரும்பையாவது கிள்ளிப் போட்டது உண்டா?

பசிப் பிணி போக்கும் காலை உணவுத்திட்டத்தை சிறுபான்மை மதத்தினர் நடத்தினர் நடத்தும் கல்வி நிலையங்களுக்கும் விஸ்தரிக்கப் போவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். அத்துடன் சிறுபான்மையினர் நலன் பேணும் 17 அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. உண்மையில் பா.ஜ.க. பாசத்திலிருந்து அ.தி.மு.க. விலகவில்லை. அவர்களே இது "நேச்சுரல் அலையன்ஸ்" என்று முன்பு கூறியிருக்கிறார்கள். அ.தி.மு.க. தேர்தலுக்காக போடும் நாடகத்தை சிறுபான்மை மக்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டைச் சேர்ந்த யாரும் நம்பமாட்டார்கள் என்பது உறுதி.

இவ்வாறு அவர் கூறினார்.



திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் நகராட்சி ஜெயாநகர் மற்றும் நேதாஜி சாலையில் உள்ள கடைகளில் பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் கலந்து கொண்டு பொங்கல் பரிசாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரையுடன் ரூ 1000 ரொக்கப்பணம் மற்றும் 1 முழு கரும்பு,, 1,வேட்டி, 1சேலை ஆகியவை அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கினார். உடன் நகர்மன்றத் தலைவர் உதயமலர் பாண்டியன், நகரச் செயலாளர் நகர துணைத்தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், நகாரட்சி ஆணையர் சுரேந்திரஷா, உள்பட கழக நிர்வாகிகள் நகர் மன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பரமத்தி சண்முகம்
### சனவரி 12 (2019)



இளமைப் பருவத்திலேயே பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, பகுத்தறிவாளராகவும் – சிந்தனையாளராகவும் திகழ்ந்து, கழகம் தொடங்கிய பின்னர் கழகப் பணியாற்றியவர்.

கரூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மாநில நெசவாளர் அணித் தலைவராகவும் – தொ.மு.ச. பேரவை துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.,

கரூர் நகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். "சன்முரசு" இதழ் ஆசிரியராகவும் இருந்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்றதுடன், நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மகேஸ்வரி முருகவேல் எம்.சி. ஏற்பாட்டில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்

## வேளச்சேரி 175-வது வார்டில் 1000 பேருக்கு பொங்கல் பரிசு தொகுப்பு!

### தமிழச்சி தங்கபாண்டியன் - மு.மகேஷ்குமார் - அசன் மவுலானா - அரிமா சு.சேகர் பங்கேற்பு

சென்னை, ஜன, 12 -

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி 175 வது வார்டு தி.மு.க சார்பில் பொங்கல் பரிசு தொகுப்பு 1000 நபர்களுக்கு வழங்கும் விழா இன்று (12- 1- 2024) மாலை 4 மணிக்கு வி.வி. காலனி ஆதம்பாக்கத்தில் 175வது வார்டு மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி முருகவேல் தலைமையில் வழங்கப்படுகிறது.

மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கி சிறப்புரையாற்றுகிறார். இதில் முனைவர். தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், அசன் மௌலானா எம்.எல்.ஏ., பகுதிக் கழகச் செயலாளர் அரிமா சு.சேகர், மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ் , மாமன்ற உறுப்பினர்கள் பெ.மணிமாறன், எஸ். பாஸ்கரன், வே.ஆனந்தம் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கழக த. ரமேஷ், வேளச்சேரி மேற்கு பகுதி நிர்வாகிகள்: சி.பழனி ந.டில்லிகுமார், எம்.ஏ. சங்கர், பொ.த.எழில்வாணன், சே.மைதிலி,

வட்ட கழக செயாளர்கள் வி.சக்திவேல், க.பாரதிதாசன், பொ.த.மதிவாணன், ஜி.பி.எஸ். பாலசதீஷ், கே.என்.தாமோதரன், த. பார்த்திபன் ,தே.கோபி மற்றும்பலர் கலந்து கொள்கின்றனர்.

எனவே நமது வட்டத்திற்குட்பட்ட பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழக முன்னோடிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் எஸ்.முருகவேல் கேட்டுக்கொண்டுள்ளார்.

நிகழ்ச்சி ஏற்பாடு : 176 வது வட்ட கழக செயலாளர் எஸ்.முருகவேல்.

### பள்ளிக் கல்வித்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில்

## மாமன்ற உறுப்பினர்களுக்கான பள்ளி மேலாண்மைக் குழு பயிலரங்கம்!

### மேயர் ஆர்.பிரியா - துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு

சென்னை, ஜன.12-

பள்ளிக் கல்வித்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மாமன்ற உறுப்பினர்களுக்கான பள்ளி மேலாண்மைக் குழு குறித்த பயிலரங்கத்தினை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று (11.01.2024) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்து, மாமன்ற உறுப்பினர்களுக்கான பள்ளி மேலாண்மைக் குழு விற்கான பயிற்சி கையேட்டினை வெளியிட்டு வழங்கினார்.

இந்த பயிலரங்கத்தில், குழந்தைகளின் இலவச, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்2009 - உரிமையும் பொறுப்பும், பள்ளி மேலாண்மைக் குழு அறிமுகம், பள்ளி மேம்பாட்டுத் திட்டமும், பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் பங்கும் என்கிற தலைப்பில் மாமன்ற உறுப்பினர்களுக்கு பயிற்சிகள் வழங்கப் பட்டது.

குழந்தைகளின் இலவச, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்-2009, அனைத்து குழந்தைகளுக்குமான கல்வி பெறும் உரிமையினை உத்தரவாதப்படுத்தியுள்ளது. குழந்தைகள் தரமான கல்வி பெறும் வகையில் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், குழந்தைகளுக்கு உகந்த, பாதுகாப்பான பள்ளிச் சூழலை உருவாக்குதல், பள்ளி இடைநிற்றலை தடுத்தல், வாய்ப்பு மறுக்கப் பட்ட, நலிந்த பிரிவு குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல் போன்ற பணிகளை அரசும், உள்ளாட்சி அமைப்புகளும் மேற்கொள்ள வேண்டும் என இச்சட்டம் வலியுறுத்துகிறது.

இச்சட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு அரசுப் பள்ளியிலும் 20 உறுப்பினர்களைக் கொண்ட பள்ளி மேலாண்மைக் குழுவை அமைக்க வேண்டும். இக்குழுவில் பெரும்பான்மையாக அப்பள்ளியில் பயிலும் குழந்தைகளின் பெற்றோர்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். பள்ளியின் தேவைகளை உள்ளாட்சி அமைப்புகளின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இருவர் இக்குழுவில் உறுப்பினர்களாக இருப்பார்கள். உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இக்குழுவில் இருப்பதால் பள்ளியின் தேவைகள் உரிய முறையில் உள்ளாட்சி நிர்வாகத்தின் (பெருநகர சென்னை மாநகராட்சி) கவனத்திற்குக் கொண்டுசென்று விரைவாக தீர்வு காண்பர்.

எனவே, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்-2003ன்படி குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்தல், பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் பள்ளி வளர்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுவை வலுப்படுத்துவதில் மாநகர/நகர்ப்புற/ஊரக உள்ளாட்சித் துறை பிரதிநிதிகளுக்கு அவர்தம் பொறுப்புகளையும், கடமைகளையும் எடுத்துக் கூறி திறம்படப் பங்காற்றும் வகையில் இப்பயிற்சி ஏற்பாடு செய்து நடத்தப் பட்டது.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு. மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, வட்டார துணை ஆணையாளர்கள் கட்டா ரவி தேஜா, (வடக்கு), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), நிலைக்குழுத் தலைவர்கள் பாலவாக்கம் த. விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரி விதிப்பு (ம) நிதி), மண்டலக்குழுத் தலைவர்கள் நேதாஜி யு.கணேசன், பி.ஸ்ரீராமுலு, பி.கே. மூர்த்தி, கூ.பி.ஜெயின், நொளம்பூர் வே.ராஜன், ஆர்.துரைராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி கல்வி அலுவலர் திருமதி வசந்தி பயிற்சியாளர்கள் செ.மரியசூசை, முனைவர் ல.பெர்னாட், ஜெ.ஷியாம் சுந்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்ட அளவிலான

## சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

### மாவட்ட கழகச் செயலாளர் – திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தலைமை கழகம் அறிவித்துள்ள அறிவிப்பின்படி தி.மு.கழக தகவல் தொழில்நுட்ப அணியின் முன்னெடுப்பில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு கூட்டம் நாளை (13-01-2024 சனிக்கிழமை) காலை 9 மணியளவில் திருவள்ளூர் ஆயில்மில் அருகில் உள்ள IRN திருமண மண்டபத்தில் மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு கூட்டம் நடைபெற உள்ளது.

மேற்படி சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு கூட்டத்தில் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மை நல உரிமை பிரிவு அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி உள்ளிட்ட கழக அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள். அணிகளின் தலைவர், துணைத்த லைவர்கள், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள். மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய-நகர-பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



தமிழர் திருநாளை முன்னிட்டு பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் செம்பரம்பாக்கம் ஊராட்சியில் 700 நபர்களுக்கு நல உதவிகளை ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் கே.பி.ஞானமூர்த்தி ஏற்பாட்டில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ஒன்றிய குழு துணை தலைவர் எம்.பரமேஸ்வரி கந்தன், ,மாவட்ட கவுன்சிலர் ஏஜி.ரவி, ஒன்றிய துணைச் செயலாளர் ஏ.ஆர்.பாஸ்கர் செம்பரம்பாக்கம் ஒன்றிய கவுன்சிலர் பிரியா செல்வம் மற்றும் கிளை கழக செயலாளர் ஜி.கே.குமார் ,சாரங்கம், எம்.ராதாகிருஷ்ணன், எம்.கே.பாஸ்கர், டி.விநாயகம் சி.எம்.ஸ்ரீதர், ராஜாமணி, கேசவன், ராமச்சந்திரன் ராஜேந்திரன் ,மனோஜ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்




சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், நேற்று (11.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2024 விழாவில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினைத் திறந்து வைத்து பார்வையிட்டார். இவ்விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் கலாநிதி வீராசாமி, எம்.எம்.அப்துல்லா, அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, பொதுத் துறை செயலாளர் க. நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மயூர வாகன சேவன விழாவின் 100வது ஆண்டு விழா:

# ‘பாம்பன் சுவாமிகளின் சரித்திரம்’ எனும் மறுபதிப்பு செய்யப்பட்ட நூல்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வெளியிட்டார்!

சென்னை, ஜன.12-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (11.01.2024) சென்னை, திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாசர் சுவாமி திருக்கோயிலில் மயூர வாகன சேவன விழாவின் 100வது ஆண்டை முன்னிட்டு புதுபொலிவோடு மறுபதிப்பு செய்யப்பட்ட “பாம்பன் சுவாமிகளின் சரித்திரம்” என்னும் நூலை வெளியிட்டு, தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் அரசு இசைக் கல்லூரியை சேர்ந்த 108 மாணவ, மாணவியரின் சண்முக கவசம் மற்றும் குமாரஸ்தவம் பாராயணம் மற்றும் மயூர வாகன சேவன காட்சிகளை விளக்கும் நாட்டிய நிகழ்ச்சியையும் தொடங்கி வைத்தார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முருகப்பெருமான், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் தூய பக்தியையும், அவர் இயற்றிய சண்முகக் கவசத்தின் மகிமையையும் தம் மெய்யடியார்கள் அறியும் வண்ணம் திருவிளையாடல் புரிந்த நிகழ்வு மயூர வாகன சேவன விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. இச்சிறப்புமிக்க மயூர வாகன சேவன விழாவின் 100வது ஆண்டு விழா மூன்று நாட்கள் திருவான்மியூர், அருள்மிகு பாம்பன் குமரகுருபர சுவாமி திருக்கோயிலில் வெகுவிமரிசையாக கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி “பாம்பன் சுவாமிகளின் சரித்திரம்” என்னும் நூலினை மறுபதிப்பு செய்து புதுப்பொலிவோடு வெளியிட்டிருக்கிறோம்.

மேலும், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் அரசு இசைக் கல்லூரியை சேர்ந்த 108 மாணவ, மாணவியர் சண்முக கவசத்தினை பாராயணம் செய்தும், அதன் காட்சிகளுக்கேற்ப நாட்டிய நடனமும் ஆடினர். அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் நாள் முழுவதும் அன்னதானத்தை தொடங்கி வைத்துள்ளோம். இன்று இரவு மயூர வாகன சேவனத்தின் தேர் உலா நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆட்சி ஏற்பட்ட பின், கமலமுனி சித்தர், சுந்தரானந்தர் சித்தர், பாம்பாட்டி சித்தர் போன்ற சித்தர்களுக்கு விழா எடுத்து கொண்டாடப்பட்டுள்ளது. அருளாளர்களான சேக்கிழாருக்கான விழாவினை மூன்று நாட்கள் நடத்தியும், திரு அருட்பிரகாச வள்ளலாருக்கு முப்பெரும் விழாவினை நடத்திட ரூ.3.25 கோடி அரசு மானியம் வழங்கி சிறப்பாக நடத்தி, 52 வாரங்கள் தொடர் அன்னதானம் வழங்கியும், சமயக்குறவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர், ஸ்ரீமத் நாதமுனிகள், அவரது பேரன் ஆளவந்தார் ஆச்சாரியார் போன்றவர்களுக்கு விழா எடுத்தும் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது. மேலும், ரூ.13 கோடி மதிப்பீட்டில் மயிலாப்பூரில் அமைந்துள்ள திருவள்ளுவர் திருக்கோயிலை புனரமைப்பு செய்யும் பணிகளும், ரூ.17 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மாவட்டம், துளசியாப்பட்டினத்தில் ஒளவையாருக்கு மணி மண்டபம் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, 1,224 திருக்கோயில்களுக்கு குடமுழுக்குகள் நடந்தப்பட்டுள்ளது. திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.5,557 கோடி மதிப்பிலான 6,058 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது.

சித்தர்கள் சான்றோர்கள் ஆன்றோர் பெருமக்களுக்கு விழா எடுத்து சிறப்பு சேர்க்கின்ற ஒரு ஆன்மீக ஆட்சியாக தமிழக முதல்வர் தளபதி அவர்கள் தலைமையில் அமைந்திருக்கின்ற ஆட்சி திகழ்கிறது. இன்றைக்கு பாம்பன் சுவாமிகளின் மயூர வாகன சேவன விழா வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த விழாவினை இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் பெருவிழாவாக கொண்டாடுவதை பாம்பன் சுவாமிகளின் மீது பற்று கொண்டுள்ள அனைத்து பக்தர்களும் தங்களது மகிழ்ச்சியையும், முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்தது எங்களுக்கு இது போன்ற நிகழ்ச்சிகளை தொடர்வதற்கு ஊக்கமும் உற்சாகத்தையும் அளிக்கின்றது.

சபரிமலை ஐயப்பன் திருக்கோயிலுக்கு வரலாறு காண அளவிற்கு பக்தர்கள் வருவதால் நீண்ட வரிசையில் அதிக நேரம் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்து வரும் நிலையில் தமிழ்நாட்டிலிருந்து வரும் பக்தர்களுக்கு உரிய ஏற்பாடுகள் விரைவான தரிசனத்திற்குரிய ஏற்பாடுகள் குறித்து நமது தலைமைச் செயலர் அவர்கள் கேரள அரசு தலைமைச் செயலர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். முதலமைச்சர் அவர்களும் இது குறித்து வலியுறுத்தியிருக்கின்றார். துறையின் அமைச்சர் என்ற முறையில் கேரள தேவசம் போர்டு அமைச்சர் மற்றும் தலைவரிடமும் பேசியுள்ளோம். சபரிமலையில் பக்தர்கள் நலனை கருதி கேரளா அரசாங்கம் எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் துரிதமாகத் தான் இருக்கிறது. வருங்காலங்களில் இதுபோன்ற கூட்ட நெரிசல்களை கட்டுப்படுத்து வதற்கும் கேரள அரசு பல்வேறு திட்டங்களையும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. அவற்றிற்கு தமிழ்நாடு அரசும் உறுதுணையாக இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், பேரூர் ஆதீனம் மருதாச்சல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞானபாலய தேசிகர் சுவாமிகள், இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, துணை ஆணையர் திருமதி சி.நித்யா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மத்திய மாவட்ட

# தகவல் தொழில் நுட்ப அணி பயிற்சி வகுப்பு!

### மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் தலைமைக் கழகம் அறிவித்துள்ள தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணியின் முன்னெடுப்பில் நாளை (13.1.2024) சனிக்கிழமை காலை 9 மணி அளவில் “ஆவடி ஹவுசிங் போர்டில் அமைந்துள்ள சுபம் மஹாலில்” மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, உள்ளிட்ட அனைத்து கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக சட்டமன்ற உறுப்பினர், மாநில, மாவட்ட, நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.




முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, உடலுறுப்பு தானம் செய்தவருக்கு இராயபுரம் ஸ்டான்லி அரசு பொது மருத்துவமனையில் அரசு மரியாதை செலுத்தப்பட்டது. சென்னை புழல்,என்.எஸ்.கே. தெருவை சேர்ந்த திருமதி.பி.பத்மா (42) என்பவர் இரு சக்கர வாகன விபத்தில் மூளைச்சாவு அடைந்தார். அவரது குடும்பத்தினர் சம்மதத்துடன் அவரது உடலுறுப்புகள் தானம் செய்யப்பட்டது. அதனை அடுத்து அவரது உடலுக்கு இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி , அரசு ஸ்டான்லி மருத்துவமனை டீன் டாக்டர்.பாலாஜி, மருத்துவர்கள் ஆகியோர் அரசு மரியாதை செலுத்தினர். உடன் இராயபுரம் பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், கழக நிர்வாகிகள் இருந்தனர்.

### இதுவரை ரூ.5 கோடியே 91 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மருத்துவம் - கல்வி உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்–பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ. 5 கோடியே 91 லட்சத்து 90 ஆயிரம். இந்த மாதம் மருத்துவம் மற்றும் கல்வி உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/– (இரண்டு லட்சம்) 11–01–2024 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பொன். சேதுமாதவன், காந்தி தெரு, பெரியப்பணிச்சேரி, சென்னை – 128 | 25,000/– |
| 2. | திருமதி மு.ஜீவா, வடக்கு கள்ளர் தெரு, பிச்சாண்டார்கோவில், திருச்சி | 25,000/– |
| 3. | வேதா.உதயசூரியன், அபில்லாக் குறுக்கு தெரு, திருவல்லிக்கேணி, சென்னை | 25,000/– |
| 4. | எம். கந்தசாமி, அகரசாத்தங்குடி, மாங்குடி அஞ்சல், திருவாரூர் – 610 103. | 25,000/– |
| 5. | திருமதி ஜி.முனீஸ்வரி, பாவடி தோப்பு தெரு, சக்கம்பட்டி, ஆண்டிப்பட்டி, தேனி | 25,000/– |
| 6. | எஸ்.ராதாகிருஷ்ணன், ஒன்றிய பிரதிநிதி, மருதங்குடி, கள்ளிக்குடி, மதுரை | 25,000/– |
| 7. | எஸ்.வீரமுத்து, கிழக்கு கொமரலிங்கம், மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம். | 25,000/– |
| 8. | வி.சஞ்சய், புளுவப்பட்டி, அம்மன் நகர், கோவை – 641 602. | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |




சென்னை இந்திய தொழில்நுட்ப கழகம் மற்றும் போயிங் நேஷனல் ஏரோ மாடலிங் நிறுவனம் இணைந்து தென்மண்டலங்களுக்கு இடையே நடத்திய ஏரோ மாடலின் போட்டியில் தமிழ்நாடு சார்பாக கலந்து கொண்டு வெற்றி பெற்ற அரசு ஆதிதிராவிடர் பள்ளி மாணவிகளை, தாட்கோ தலைமை அலுவலகத்தில், நேற்று (11.1.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் பாராட்டி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின் போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் த.ஆனந்த், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தாட்கோ தலைமை அலுவலகத்தில் நேற்று (11.1.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் வெளியிடப்பட்ட, பல்வேறு அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் த.ஆனந்த், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புழல் இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் சமத்துவ பொங்கல் திருவிழா!

### புழல் எம். நாராயணன், வி.ஆர்.குப்பன், அம்மு மூர்த்தி பங்கேற்பு!

சென்னை, ஜன.12-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 23 'அ' வட்டம் புழல் காவாங்கரை பகுதியில் அமைந்துள்ள, இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாமில், சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

காவாங்கரை பகுதி அளவிலான மகளிர் சுய உதவி குழு கூட்டமைப்பு மற்றும் இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம் மகளிர் கூட்டமைப்பு ஆகியவை சேர்ந்து சமத்துவ பொங்கல் கொண்டாடினார்கள்.

இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் உள்ள விளையாட்டு திடலில் நடைபெற்ற இந்த சமத்துவ பொங்கல் விழாவில், சுமார் 100க்கும் மேற்பட்ட சுய உதவிக்கு தாய்மார்கள் கலந்து கொண்டு சமத்துவ பொங்கல் பண்டிகையை கொண்டாடினார்கள். மகளிர் தாய்மார்கள் கோலமிட்டு புதுப்பாணை வைத்து பச்சரிசி விட்டு வெள்ளம் புது பானை வைத்து, பச்சரிசி இட்டு, வெல்லம் சேர்த்து, கரும்பு, மாவிலை தோரணங்கள் கட்டி, பொங்கல் கொண்டாடினார்கள்.

மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் அம்மு மூர்த்தி முன்னிலையில் நடைபெற்ற பொங்கல் விழாவில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், 23 'அ' வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன், கூட்டமைப்பு சிஇஓ டார்த்தி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கோமளவள்ளி, புழல் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் சபிதா ஆகியோர் பொதுமக்கள் அனைவருக்கும் சர்க்கரைப் பொங்கல் வழங்கினார்கள்.

முன்னதாக 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு மத்தியில் இலங்கைத் தமிழர்கள் முகாமில் வசிக்கும் பள்ளி மாணவ,மாணவிகள் பரத நாட்டியம், சிலம்பம் ஆகியவற்றை சிறப்பாக செய்து காண்பித்தார்கள். மேலும் பாட்டுப்போட்டி நடத்தி உற்சாகப்படுத்தினார்கள். போட்டிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் சால்வைகளை அணிவித்து சிறப்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் வட்ட நிர்வாகிகள் ராமச்சந்திரன், சுதாகர் , உசேன் மைதீன்,

க. சிவகுமார், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சுதா, மனிதநேய மக்கள் கட்சி இளைஞர் அணி சேக் முகமது அலி, தமிம் அன்சாரி, ஜெயதேவி, காவாங்கரை ஏ.எல்.எப். நிர்வாகிகள் வைலட்ராணி, காமாட்சி, கோமதி, கலைவாணி, எஸ். கலைவாணி, சுதா, பவித்ரா, புஷ்பா, மைதிலி, கீதா, இலங்கைத் தமிழர்கள் மகளிர் கூட்டமைப்பு நிர்வாகிகள் நித்திய ஜமுனா, நிலாவாணி, பரிமளா, துர்கா, சந்திரலேகா, ஜீவிதா, சுகிர்த மலர், சாந்தி, தனலட்சுமி, ராஜேஸ்வரி மலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



திரு.வி.க நகர் வடக்கு பகுதி 71 வது வட்டத்தில், பொங்கல் விழாவை முன்னிட்டு நல உதவி வழங்கும் விழாவில் அமைச்சர் பி.கே.சேகர் பாபு 300 பயனாளிகளுக்கு புடவை, 5 கிலோ அரிசி, பொங்கல் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார். இவ்விழா வட்ட துணைச் செயலாளர் வி. பாலாஜி தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், புனிதவதி எத்திராசன், பொதுக்குழு உறுப்பினர் பி.உதயசங்கர், மாவட்ட அமைப்பாளர் ஜி.தாமோதரன், தில்லை கதிரவன், பகுதி துணைச் செயலாளர்கள்: ஆர்.ராஜன், புல்லட் கி.ரமேஷ், வட்ட செயலாளர்: பரிமளா சுரேஷ், பாபு, ஸ்வீட் பாபு, ஜெ.அண்ணாதுரை, ரெட்.லிங்கேசன் ஆகியோர் பங்கேற்றனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும் மாமன்ற உறுப்பினருமான ராஜா அன்பழகன் எம்.சி. ஏற்பாட்டில் 141வது வார்டு பொது மக்களுக்கு பொங்கல் பரிசினை மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை எம்.சி., வட்ட செயலாளர்கள் என்.துரை, எஸ்.லட்சுமிகாந்தன் மற்றும் ஜெ.ஜானகிராமன், எஸ்.ராமலிங்கம் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

## காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று (12.01.2024 - வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணியளவில் கலைஞர் பவளவிழா மாளிகையில் எனது தலைமையில் சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளர் டாக்டர்.சுபேர்கான் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் மாநகரம், பகுதி கழகங்கள், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம், வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள் : தேர்தல் பணிகள் குறித்து ஆய்வு.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

## சைதை சாதிக் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்

## சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பில் பொங்கல் விழா!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்!

சென்னை,ஜன.12-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்குப் பகுதியில் சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் தலைமையிலும். சைதை மேற்கு பகுதி கழகச் செயலாளரும் பத்தாவது மண்டல குழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்குப் பகுதி கழகச் செயலாளரும் 13 வது மண்டல குழு தலைவர் இரா துரைராஜ்

பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், சைதை மா அன்பரசன், பா சுப்பிரமணி, ஆகியோர் முன்னிலையில் தமிழ் புத்தாண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு கழகத் தோழர்களுக்கு மற்றும் புயலில் கடுமையாக பணியாற்றிய மாநகராட்சி ஊழியர்கள் துப்புரவு பணியாளர்களுக்கு புத்தாடைகளை

இன்று 12.1.24 வெள்ளிக்கிழமை 12 மணி அளவில்மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அலுவலகத்தில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வழங்குகிறார்.

மேலும் இந்நிகழ்வில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு மகேஷ்குமார், மாவட்ட அவை தலைவர் எஸ்குணசேகரன், மாமன்ற உறுப்பினர் தா. மோகன் குமார், பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த. சம்பத் ,ஆர். ரமேஷ், கவிதா, கௌதமன், வி.பி. ஜானகிராமன், வட்டக் கழக செயலாளர்கள் அட்கோ கமலநாதன் சைமு சேகர் ந. தமிழரசு எஸ் பி கோதண்டம், எம். நாகா மற்றும் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டே இந்நிகழ்வினை சிறப்பிக்க உள்ளனர்.

## ஆளுநரின் அதிகாரம் மிகக்குறுகியது! அலங்காரப் பதவி என்பதால்

## ஆர்.என்.ரவி அதன் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வது அவசியம்!

### 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜன.12-

தினகரன் நாளிதழின் நேற்றைய தலையங்கம் வருமாறு:-

ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சிப்பொறுப்பேற்ற 2014க்குப் பிறகு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களின் மூலம் ஒன்றிய அரசு நெருக்கடி கொடுப்பது உச்சகட் டத்தை எட் டியிருக்கி ன்றன.

கடந்த 2021ஆம் ஆண்டு செப்டம்பர் 18ஆம் தேதி தமிழ்நாட்டின் ஆளுநராக ஆர்.என்.ரவி பதவியேற்றதிலிருந்தே, அவர் மாநில அரசுடன் சீரான உறவோடு இருக்கவில்லை. அவர்

ஆளுநராக இருக்கும் இந்த இரண்டேகால் ஆண்டிற்குள் பலமுறை அவரை மாற்ற வேண்டுமென தமிழ்நாடு கட்சிகள் கோரிக்கை விடுக்கும் அளவுக்கு உறவு சீர்கெட்டது. ஆளுநர் ஆர். என். ரவியை மாற்ற வேண்டுமென ஒருமுறை மக்களவையிலேயே தி.மு.க. சுட்டிக்காட்டியது. கடந்த நவம்பர் மாதத்தில் ஜனாதிபதி அலுவலகத்திற்குச் சென்ற தி.மு.க. கூட்டணி எம்.பிக்கள், ஆளுநர் ஆர். என். ரவியை மாற்றவேண்டுமென மனு ஒன்றை அளித்தனர்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவியைப் பொறுத்தவரை, தி.மு.க. அரசின் திராவிட மாடல் என்ற பெருமிதம், இரு மொழிக் கொள்கை, இந்தி எதிர்ப்பு, புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பு போன் றவை அவருக்கு உவப்பிற்குரியதாக இல்லை. பல முக்கிய விவகாரங்களில் மாநில அரசு எடுத்திருக்கும் நிலை ப்பாடுகளுக்கு மாறாக, ஆளுநர் நிலைப்பாடு எடுப்பதும் அதனை வெளிப்படை யாக தெரிவிப்பதுமாக இருந்தார். அதேபோல பா.ஜ.வின் பார்வையிலான வரலாற்றை பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர்



தினகரன்

ஜனவரி 11, 2024 வியாழக்கிழமை

அதிகாரம் குறுகியது

பேசுவதும் பல முறை சர்ச்சைக்குள்ளானது.

சென்னை பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலை., கல்வியியல் பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர் பணியிடம் தற்போதுவரை காலியாக உள் ளது. அவற்றுக்கு துணை வேந்தர்களை நியமனம் செய்வது தொடர்பான கோப்புகளை ஆளுநரின் பார்வைக்கு தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்தது. துணை வேந்தர் நியமனத்தில் யுஜிசி பிரதிநிதிகளை நியமனம் செய்ய வேண்டும் என ஆளுநர் தரப்பில் இருந்து வலியுறுத்தப்பட்டது. இதற்கு தமிழ்நாடு அரசு எதிர்ப்பு தெரிவித்தது. ஆனாலும் ஆளுநர் ஆர்.என்.ரவி தமது நிலை ப்பாட்டை மாற்றிக் கொள் ளாமல், 3 பல்கலைக் கழகங்களுக்கும் துணை வேந்தர்களை தேர்வு செய்ய யுஜிசி பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய தேடுதல் குழுக்களை அறிவித்தார். ஆளுநரின் இந்த செயலுக்கு பல்கலைக் கழக பேராசிரியர் சங்கங்களும், மாணவர் அமைப்பினரும் கண்டனங்களை தெரிவித்தனர்.

இந்நிலையில், ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கிலும் இந்த தேடுதல் குழு விவகாரம் சுட்டிக் காட்டப்பட்டது. இதையடுத்து தமிழ்நாடு முதல்வருடன் ஆலோசனை நடத்த ஆளுநர் ரவிக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது. இதனடிப்படையில் அண்மையில் ஆளுநர் ரவி, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினு டன் சந்திப்பு மேற்கொண்டார். இதைத் தொடர்ந்து 3 பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்களை தேர்வு செய்ய தாம் நியமித்த தேடுதல் குழுக்களை திரும்பப் பெறுவதாக ஆளுநர் ரவி அறிவித்து உத்தரவிட்டுள்ளார்.

ஆளுநரின் அதிகாரம் என்பது மிகக் குறுகியது என்பது உச்ச நீதிமன்றத்தி ன் பல தீர்ப்புகளில் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது. இனியாவது அவர் தனது அலங்காரப் பதவியின் பொறுப்புணர்ந்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம் என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நல உதவிகள் வழங்குகிறார்:

## சென்னை வடக்கு மாவட்ட கழகத்தில் பொங்கல் விழா!

### மாவட்டச் செயலாளர் தா இளைய அருணா வேண்டுகோள்!

சென்னை, ஜன.12-

சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழர் திருநாளாம் தைத்திங்கள் முதல் நாள் மற்றும் தமிழ் புத்தாண்டைக் கொண்டாடும் வகையில் சென்னை வடக்கு மாவட்டத்தில் இன்று (12.1.2024) மாலை 3 மணி அளவில் ராயபுரத்தில் அமைந்துள்ள ரம்ஜான் மஹாலில் கழக பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர், வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் ஆகியோருக்கு நலத்திட்ட உதவிகளை இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி பகுதி செயலாளர், வட்ட செயலாளர்கள், அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கல்வி உரிமையைக் காக்க - பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

## புதுடெல்லியில் இன்று மாணவர் பேரணி!

### கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஜன. 12 -

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு: -

கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, பாசிச பா.ஜ.க. அரசின் ஜனநாயக விரோத ஆட்சியை கண்டித்தும், மாணவர் விரோத கல்விக் கொள்கை, சட்டங்கள், திட்டங்கள் குறிப்பாக தேசிய கல்விக் கொள்கை 2020, நீட் தேர்வுக்கு எதிராக கழக மாணவர் அணி தொடர்ந்து போராடி கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே.

இந்திய துணைக்கண்டத்தை காக்கும் நோக்கத்தோடு, பாசிச பா.ஜ.க அரசை எதிர்த்து, இந்தியா (I.N.D.I.A.) கூட்டணி ஒரு அமைப்பை உருவாக்கியது.

இந்த அமைப்பின் செய்தியாளர்கள் சந்திப்பு கடந்த 21.11.2023 அன்று டெல்லியில் நடைபெற்றது. அதில், பாசிச பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள தேசிய கல்விக் கொள்கை 2020 மாணவர்களின் கல்வி உரிமைக்கு எதிரானது. அது கல்வியை காவிமயமாக்கவும், வணிகமயமாக்கவும், கார்ப்பரேட்களிடம் தாரை வார்க்கவும், அனைவருக்குமான கல்வி உரிமையை மறுக்கவும், இந்தி, சமஸ்கிருத திணிப்பி ற்கும் அடித்தளமிடுகிறது. இந்தியாவின் பன்முகத் தன்மையை சிதைத்து ஒற்றைப் பண்பாட்டு தேசமாக அதிலும் குறிப்பாக சமஸ்கிருத பண்பாட்டுத் தேசமாக இந்தியாவை கட்டமைக்க வழிவகுக்கும் தேசிய கல்விக் கொள்கை 2020ஐ நிரா கரிக்க வேண்டுமென்றும்,

கல்வியே ஒரு மனிதனுக்கு அறிவையும், ஆற்றலையும் சுயசிந்தனையும், சுய மரியாதையையும், சுதந்திரத்தையும் வழங்கக்கூடியது. தனிமனித சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் மாண்பு. அந்த ஜனநாயகத்தை காக்கும் தூணாக விளங்கும் கல்வியை ஏழை எளியோரிடமிருந்து பறித்து, பணக்கார வர்க்கத்திடம் வழங்க சதிதிட்டம் செய்கிறது பாசிச பா.ஜ.க. அரசு. அதன் மூலம் கல்வி மறுக்கப்பட்ட சமூக நிலையை மீண்டும் கட்டமைக்கவே விரும்பு கிறது தேசிய கல்விக் கொள்கை 2020. கல்வி மறுக்கப்பட்ட சமூகம் தனது சுயமரியாதையும், சுதந்திரத்தையும் இழந்துவிடும். அரசியலமைப்புச்சட்டம் வழங்கிய அத்தனை உரிமைகளையும் இழக்கச் செய்து சுதந்திரமற்றவர் களாய், சுயமரியாதை அற்றவர்களாய், ஒட்டுமொத்த ஜனநாயகத்தை அழிக்க முயல்கிறது பாசிச பா.ஜ.க. அரசு.

எனவே, இந்திய துணைக் கண்டத்தை காக்க, இந்தியாவின் பன்முகத்தன்மையை, ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை, மாணவர்களின் கல்வி உரிமையை காத்திட தேசிய கல்விக் கொள்கை 2020ஐ நிராகரிப்போம்! பாசிச பா.ஜ.க. அரசை நிராகரி ப்போம்!! என்றும், கல்வி உரிமையை காப்போம்! இந்தியாவை காப்போம்!! என்ற முழக்கத்து டன், "Save EDUCATION Reject NEP; Save INDIA Reject BJP" என்ற முழக்கத்துடன், இன்று (12.01.2024) தலைநகர் டெல்லியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்கும் நாடாளுமன்றம் நோக்கிய மாபெரும் மாணவர் பேரணி (Parliament March) நடத்திட யுனைடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா (United Students of India) கூட்டமைப்பு எடுத்த முடிவினை அறிவித்தோம்.

அதன்படி, பாசிஸ்ட்டுகளிடமிருந்து இந்திய துணைக் கண்டத்தை காத்திடவும், மாணவர்களின் கல்வி உரிமையையும் பாதுகாத்திடவும் டெல்லியில் நடைபெறும் பேரணிக்கு தி.மு.க. மாணவர் அணியின் அடலேறுகளே, மாணவர் சேனையே அணி திரண்டு வாரீர்! வாரீர்!! என அன்போடு அழைக்கின்றேன்!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



புழல் இலங்கை தமிழர்கள் மறு வாழ்வு முகாமில் சமத்துவப் பொங்கல் விழா, பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் அம்மு மூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்க நடைபெற்றது.

## ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. தலைமை! கே.கண்ணன் மு.ராசா முன்னிலை!

## விருகம்பாக்கம் 136 வது வட்டத்தில் 1650 நபர்களுக்கு பொங்கல் தொகுப்பு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, ஜன. 12

சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, 136 வது வார்டுக்குட்பட்ட, இராணி அண்ணாநகர் பகுதியில் 1650 நபர்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி இன்று (12.1.2024 வெள்ளிக்கிழமை) மாலை 5 மணி அளவில், சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு பொங்கல் தொகுப்பினை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், மாநில வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, பகுதிக் கழகச் செயலாளர்கள் கே. கண்ணன் எம்.சி, மு.ராசா, மாமன்ற உறுப்பினர் நிளவரசி துரைராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், வட்டக் கழகச் செயலாளர்கள் பூக்கடை பழனிச்சாமி, இரா.சொழியன், , பொன். வர.லோகு, பி.கே.குமார், அ. கதிரேசன், கி.சதீஷ்கண்ணன், அன்பழகன், சோ. சொந்தில்குமார், எஸ். மைக்கில், வீ.ஏ.ராஜா, மு.கோவிந்தராஜ், பழக்கடை பாஸ்கரன், தஞ்சை பாபு, மாவட்ட அமைப்பாளர் சசிகுமார், கனிமொழி, நிஷா,மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம். விநாயகமூர்த்தி, சங்கர்கனேஷ், கிருஷ்ணாகுமார், எழில் பாண்டியன், ராமபுரம் ரவி, தியாகராஜன், கோட்டூர் பிரகாஷ் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.



இராயபுரம் சட்டமன்ற தொகுதி 53 வது வட்டம் ஸ்டான்லி நகர் பகுதியில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி ஏற்பாட்டில், மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட 2000 குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசி, பெட்ஷட் உள்ளிட்ட நலத்திட்ட உதவிளை ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், வட்ட செயலாளர்கள் பால லட்சுமணன், கௌரீஷ்வரன், கொரியர் முருகன், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் உடனிருந்தனர் .


கடலால் பிரிக்கப்பட்டுள்ள
தமிழ் சொந்தங்களை
தமிழால் இணைக்கும் விழா !
அயலகத் தமிழர் தினம்-2024
நாள் : 12.01.2024 வெள்ளிக்கிழமை நேரம் : காலை 09.00 முதல் இரவு 7.00 மணி வரை
இடம் : சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கம், சென்னை.
அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி விழாப் பேருரை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
தலைமை விருந்தினர்
திரு. கா.சண்முகம்
மாண்புமிகு உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர், சிங்கப்பூர்.
முன்னிலை
திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான்
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
திரு. கார்த்திகேய சிவசேனாபதி
தலைவர், அயலகத் தமிழர் நல வாரியம்
திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி
மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திரு. திருச்சி சிவா
நாடாளுமன்ற உறுப்பினர்
அனைவரையும் அன்புடன் வரவேற்கும்.
R.விஜயகுமார் B.A.,B.L.,
செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்
செஞ்சி ஒன்றிய செயலாளர் (கி) , தலைமை செயற்குழு உறுப்பினர்
L.P.நெடுஞ்செழியன் B.A.,B.L.,
மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் (கி)
தலைமை செயற்குழு உறுப்பினர்
K.S.M.மொக்தியார் அலி மஸ்தான் B.Tech.,IT.LLB.,
தலைவர் - செஞ்சி பேரூராட்சி, விழுப்புரம் மாவட்டம்.
JN ADS
9790242624 digital printing-Gingee


# திராவிட சினிமா

## 40

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**









படங்கள் உதவி : ஞானம்

# எம்.ஜி.ஆர். எனும் திராவிட எதிர் நாயகன்–3

■ **வீ.மா.ச.சுபகுணராஜன்**

சென்ற வாரம் ‘எங்கள் தங்கம்’ திரைப்படத்தில் ‘அசல்‘ எம்.ஜி.ஆரும், ‘நகல்’ எம்.ஜி.ஆரும் சந்திக்கும் அபூர்வமான காட்சியின் வாசிப்பு சாத்தியம் அல்லது அந்தக் காட்சி வெளிப்படுத்தும் செய்தியைப் பலவகையிலும் விளங்கிக் கொள்ள முடியுமென எழுதியிருந்தேன்.

எனது புரிதலில், மேடையிலிருந்த சிறுசேமிப்புத் துணைத் தலைவர் எம்.ஜி.ஆரே ‘நகல்’ (கட்டமைக்கப்பட்ட பிம்பம்), படத்தின் நாயகனான எம்.ஜி.ஆரே ‘அசல்’ என்பதே. பிம்பம் கட்டமைக்கப்பட்ட முறையில் எம்.ஜி.ஆர் எவ்வளவு கவனமாகச் செயல்பட்டார் என்பது ஓரளவு அறியப்பட்ட ஒன்றுதான். ஆனால், அந்தப் பிம்பம், தனித்துவமானதும், திராவிடக் கருத்தியல் மூலத்துக்கு அப்பாலும் கட்டமைக்கப்பட்டது என்பதே கவனத்துக்குரியது.

எம்.ஜி.ஆர் ஒருபோதும் பெரியாரியச் சிந்தனையின் விளிம்பில்கூட இருப்பு கொண்டதில்லை. எனவே, சுயமரியாதை, பகுத்தறிவு, சமூகநீதி போன்ற கோட்பாடுகளை திராவிடப் படைப்பாளிகள் அண்ணா, கலைஞர் போன்றவர்களின் படங்களில், குறிப்பாக திராவிடப் பாடலாசிரியர்களின் பாடல்களில், ஒட்டி உறவாடிவிட்டு, பிற படங்களில் விலகி நிற்பவர். அந்த விலகலுக்கு அவர் கண்டடைந்த இன்னொரு முகமூடி, காந்தி.

## கல்வியைத் தனியார்மயமாக்கிய வள்ளல்

ஏற்கெனவே கண்டது போல, பெரியார் – தி.மு.க. முரணை இட்டு பெரியாரியத்திடமிருந்து வெகு எட்டத்தில் தன்னை இருத்திக் கொண்டவர். அண்ணா, தனது வெற்றியை பெரியாருக்குச் சமர்ப்பித்து இணைந்த பிறகும் சாமர்த்தியமாகப் ‘புத்தன், ஏசு, காந்தி...’ எனக் கதை பேசியவர், கொல்லூர் மூகாம்பிகை பக்தர். இதற்கு இவர் புனைந்த இணைவு விபரீதமானது. ஆம், காந்தியையும் அண்ணாவையும், ஒரு குடையின் கீழ் நிறுத்திய சாதுர்யம். அங்கேயும் அண்ணா குறித்த ஒரு புகழாரத்தைச் சூழ்ச்சியாக, ஒரு காந்தி – அண்ணா கோட்பாட்டு இணைவாகப் புனைந்த கபடம். ஆம், அண்ணாவை அவரது ‘எதையும் தாங்கும் இதயம்’ மற்றும் எளிமை / பொறுமை கருதி ‘தென்னாட்டு காந்தி‘ என்று கூறப்பட்டதை, தனது சூழ்ச்சியான இந்திய தேசிய சார்பை நிலைநிறுத்தும் தளமாகக் கொண்டவர் எம்.ஜி.ஆர்.

வன்முறையின் மீது நம்பிக்கையின்மை என்ற ஓர் இணைவைத் தவிர்த்து, அண்ணாவின் அரசியல் கொள்கைகள் எந்த நிலையிலும் காந்தியத்தின் சாயலற்றவை. சொல்லப் போனால் முற்றிலும் எதிரானவை. பாரதம் / இந்தியா, இந்து மதம், ராமராஜ்யம் போன்றவற்றை அவற்றின் எந்தவித புனிதவாத விளக்கங்களாலும் அண்ணாவையோ, திராவிடச் சிந்தனையையோ வென்றெடுப்பது சாத்தியமே இல்லை என்பதுதானே உண்மை.

எப்படி அந்தக் கட்டமைக்கப்பட்ட பிம்பமான எம்.ஜி.ஆர்., தேர்தல் அரசியல் களத்தில், அதைவிட முக்கியமாக ஆட்சியாளராக (முதல்வராக) தனது பிம்பத்துக்கு மாறான/ எதிரான வகையிலேயே செயல்பட்டார் என்பதையே பேராசிரியர் எம்.எஸ்.எஸ்.பாண்டியன் அவர்களின் நூல், விரிவான ஆதாரங்கள் அடிப்படையிலான வாதங்களின் மூலம் முன்வைக்கிறது. சத்துணவுத் திட்டம் மற்றும் சில விலையில்லாப் பொருட்கள் வழங்கல் தவிர்த்த, அரசுத் திட்டங்களின் மூலமாக செல்வந்தர்களின் அதிவேக வளர்ச்சிக்கு வித்திட்டார் என்பதை விளக்குகிறார். தனது பிம்பத்தைக் கட்டமைக்க, அவர் முன்வைத்த ஏழை எளியோர் நலன், கல்வி வேலைவாய்ப்பில் முன்னுரிமை, மிகக் குறிப்பாக மது ஒழிப்பு எனும் கொள்கைகளை அறவே கைவிட்டார்.

கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, உட்கட்டமைப்பு போன்றவற்றில் அரசின் பங்களிப்பை முடிந்தவரை குறைத்துத் தொழில் வளர்ச்சி, கல்வி போன்றவற்றை முற்றிலுமாகத் தனியார்மயமாக்கிய ‘தயாளன்’ எம்.ஜி.ஆர். தான். குறிப்பாகத் தொடக்கக் கல்வி தொடங்கி, உயர்கல்வி வரை (குறிப்பாகத் தொழிற்கல்வியை) தனியார்மயமாக்கிய ‘வள்ளல்’ அவரேதான். இந்த பிம்பத்துக்கும் செயல்பாட்டுக்குமான படுபாதாள இடைவெளியை, அவரது பக்தர்களான எளிய மனிதர்கள் ஏன் கண்டு விழித்துக் கொள்ளவில்லை என்பதற்கான காரணத்தையும் அந்த ‘பிம்பப் பொறி’யின் கோட்பாட்டுச் சட்டகம் மூலமாகவே விளக்குகிறார் திராவிட அறிஞர் பேராசிரியர் பாண்டியன். அதனை அடிப்படையான பொதுப் புத்தி (COMMON SENSE) குறித்த கோட்பாட்டு விளக்கத்தைப் பார்த்துவிட்டுப் பேசலாம்.

## பிம்பப் பொறியும், பொதுப் புத்தியும்

எம்.ஜி.ஆரின் ‘முகம்’ எனும் பிம்பப் பொறி உருவாக்கப்பட்ட விதம் குறித்துக் கொஞ்சம் பார்க்கலாம். எம்.ஜி.ஆர் பிம்ப உருவாக்கம் குறித்த, பேராசிரியர் பாண்டியன் அவர்களது ‘பிம்பப் பொறி’ (IMAGE TRAP என்ற சொல்லுக்குப் ‘பிம்பப் பொறி’ எனும் மொழியாக்கமே சரி) நூல் விரிவாகப் பேசியுள்ளது. இத்தாலிய மார்க்சிய அறிஞர் கிராம்சி அவர்களின் கோட்பாட்டுச் சட்டகத்தின் அடிப்படையில், அந்தப் பிம்ப உருவாக்கம் குறித்த வாசிப்பைச் செய்துள்ளார். ‘கிராம்சி அவர்களின் ‘பொதுப் புத்தி’ குறித்த சிந்தனைகளில், அதன் தன்மையிலேயே ‘பொதுப் புத்தி’, குறிப்பாக விளிம்புநிலை மக்களின் (SUBALTERN CLASS) ‘பொதுப் புத்தி’, கையாளப்படக் கூடியதாக, வளைக்கப்படக்கூடியதாக (MANIPULATED) இருக்கிறது’ என்கிறார்.

> **எம்.ஜி.ஆரின் ‘அண்ணா நாமம் வாழ்க’ எனும் துதி ‘ஸ்ரீராமஜெயம்’ போல ஒரு தெய்வத்தைப் போற்றும் தன்மை கொண்டது என்பதை உணர முடியும்.**

இந்தச் சாமனியர்களின் ‘பொதுப் புத்தியை ஆக்கிரமிக்கும்’ வேலையை எத்தனை கவனமாகத் திரைப்படப் பாத்திரத் தேர்வுகளால் கட்டமைத்தார் என்பதை, பாண்டியன் அவர்கள் விரிவான காட்சி விவரணைகளால் நீளப் பேசாமல், குறிப்புகளால் விளக்குகிறார். ஆனால், எம்.ஜி.ஆர் உருவாக்கிய ‘பிம்பப் பொறி’ எளிய மக்களின் ‘பொதுப் புத்தியில்’ கேள்விக்கிடமின்றிப் பொதிந்து போனது என்கிறார். இந்த ‘பொதுப் புத்தி‘ ஆக்கிரமிப்பு உத்தியை வெகுமக்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட கலாச்சார நம்பிக்கைகளின் மீது, அதன் வடிவிலேயே உருவாக்குவதன் மூலம் வென்றெடுத்தார் எம்.ஜி.ஆர் என்கிறார்.

உதாரணத்துக்கு, இங்கு நிலவும் தாய்மையைப் போற்றுதல் எனும் கலாச்சாரக் கூற்றினை, தொடர்ந்து பல படங்களிலும் சித்தரித்தல். திரைப்படங்களில் ‘தாய்க்கு’ கட்டுப்பட்ட மகன் (இந்தத் தாய் எனும் பிம்பம் எம்.ஜி.ஆரின் பிம்பப் பொறியில் கட்டப்பட்ட கருவாடு என்பேன்), மக்களுக்காக / ஊர் நன்மைக்காகத் தியாகம் செய்யத் தயங்காதவர், பெண்கள் கற்பின் காவலர் (ஆனால் ஒரே வேளையில் பல இளம்பெண்களை ஈர்த்துக் காதலில் விழச் செய்பவர்), தன்னலம் கருதாத தயாளர், வாரி வழங்கும் வள்ளல், காந்திய தேசியவாதி எனும் கட்டமைப்புகள் தொடர்ந்தன.

இந்த காந்திய தேசியவாதி, தனது திராவிடச் சார்பு எனும் பொய்யை, அண்ணா எனும் தனி மனிதர் மீதான மரியாதையாக மாற்றியமைத்துக் கொண்டார். அண்ணாவின் அரசியல் கொள்கையான கூட்டாட்சியை, மாநில உரிமை போன்றவற்றைப் பின் நகர்த்தி, தனது கொள்கையின் மூலமாக காந்தியை நிறுத்தியதே சான்று. இன்னும் அப்பட்டமாகச் சொல்வதானால் எம்.ஜி.ஆரின் ‘அண்ணா நாமம் வாழ்க’ எனும் துதி ‘ஸ்ரீராமஜெயம்’ போல ஒரு தெய்வத்தைப் போற்றும் தன்மை கொண்டது என்பதை உணர முடியும்.

(திராவிட எதிர்நாயகத்துவம் தொடரும்).

...படம் விரியும்

## தீவுகளைத் தீர்த்துவிடாதீர்!

லட்சத்தீவுகளுக்குச் சென்று பிரதமர் மோடி ‘ஸ்நோர்கெல்லிங்’ செய்தாலும் செய்தார், கிளம்பி உள்ளது புதிய பிரச்சினை.

தனது பயணத்தின் போது, ‘லட்சத்தீவு என்னா அழகு’ என்று பதிவு போட, உடனே மாலத்தீவு நாட்டைச் சேர்ந்த மூன்று அமைச்சர்கள் மோடியைக் கிண்டலடித்து சமூக ஊடகங்களில் பதிவு போட, காவிகள் கொதித்தெழுந்து ‘மாலத்தீவுகளுக்குச் சுற்றுலா செல்லாதீர்’ என்று கதற, இப்போது அந்த அமைச்சர்களை இடைநீக்கம் செய்துள்ளது மாலத்தீவு அரசு.

தன்னுடைய பதிவில் மாலத்தீவு குறித்துப் பிரதமர் எதுவும் சொல்லாத போதும், மாலத்தீவு அமைச்சர்களிடமிருந்து ஏன் கேலிப் பேச்சு வந்தது? காரணம், மாலத்தீவின் பொருளாதாரம் சுற்றுலாவை நம்பியே இருக்கிறது. மோடியின் பதிவால், தங்கள் நாட்டின் சுற்றுலாத்துறை பாதிக்கப்படும் என அவர்கள் நினைத்திருக்கலாம்.

அவர்கள் செய்தது தவறுதான். ஆனால், அதைத் தொடர்ந்து, ‘மாலத்தீவுகளுக்குச் சுற்றுலா செல்லாதீர்கள். லட்சத்தீவுகளுக்குச் சுற்றுலா செல்லுங்கள்’ என்று பாலிவுட் நடிகர்கள் முதற்கொண்டு காவிகள் பலர் மாலத்தீவு புகைப்படங்களைப் போட்டு விளம்பரம் கேட்டதுதான் ஊர் முழுவதும் சிரிப்பாகிவிட்டது.

மாலத்தீவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீவுகள் உள்ளன. ஆனால், பெயர்தான் லட்சத்தீவே தவிர, இருப்பது என்னவோ முப்பது சொச்சம் தீவுகள்தான். மேலும் இங்கு கடல்சார் சூழலியலைப் பாதுகாக்கும் பவளப்பாறைகள் அதிகமிருப்பதால், இங்கு சுற்றுலாவை வளர்க்கிறேன் என்று மோடி அரசு எதையேனும் செய்யப் போக, அந்தத் தீவுகளே அழிந்துபோகும் நிலை ஏற்படலாம். ‘ஈகோ’வுக்காக எதையும் காவு கொடுப்பவர்கள் தீவையும் காலி செய்ய கிளம்பி விட்டனர். மக்கள் மயங்கமாட்டார்கள்.

## :ப்ளாஷ்பேக்





முத்துமாரியப்பன்

### கலைஞர் தாத்தா!

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் எனது பிறந்த நாளை முன்னிட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. நான், எனது மகள்கள், பேத்திகள், பேரன்கள் ஆகியோருடன் சென்றிருந்த போது எனது சின்னபேத்தி அடிக்கடி பார்த்துப் பேசியிருப்பது போல குறும்புத்தனமாக தலைவர் கலைஞரிடம் “என்ன தாத்தா எப்படி இருக்கிறீங்க?” என்று கேட்ட மாத்திரத்தில் கலைஞர் அவர்கள் கலகலவென்று வாய் விட்டுச் சிரித்து “நான் நல்லா யிருக்கேன் நீ நல்லாயிருக்கியா?” என்று வினவியதும் அவரது சிரிப்பும் இன்றளவும் எங்களது நெஞ்சங்களில் நிறைந்துள்ளன.

**-த.முத்துமாரியப்பன்,**
**மாவட்டப் பிரதிநிதி,**
**கலைஞர் நகர் தெற்குப் பகுதி,**
**சென்னை தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப் புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033–24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### எம்.ஜி.ஆருக்காக கலைஞரின் கடிதம்!

**1984-ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆருக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரது உடல்நிலை குறித்து பல்வேறு செய்திகளும் வதந்திகளும் வெளியாகின. ஈரோட்டில் சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு சென்னை வந்த கலைஞர், எம்.ஜி.ஆரை நேரில் சென்று விசாரித்ததுடன் 40 ஆண்டுகால நட்பை விவரித்து ‘முரசொலி’யில் ஒரு கடிதம் எழுதினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 357




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131